பதியுறவுதித்தோன்லாபம் பருமதியிடத்தானிற்கில்
அதிகமேகோடிராஜ ரவனுக்கேசூழவிற்பன். (௱௪)

இன்னமுமநேகங்கோடி யிருக்குமேயோகதிட்டம்
சொன்னதுவியாழங்கொஞ்சஞ் சொற்றவனுதரீதி
பொன்னவன்சொன்னயோகம் பொய்யாதுசெகத்துளோர்க்குச்
சின்னதோரிடையினுளே செப்பினேனறியத்தானே. (௱௫)

சுக்கிரன்சொன்னயோகம்.

குறினிலே டதிக்கிறைட்டோன் குருவினவிடத்தர்தாமும்
மறிபகைசேரூட மன்னவன்கூடவன்றிப்
பறிபடவினமாகிற் பண்புள்ளாறுகிவாழ்வன
செறிதருமுன்னும்பின்னுஞ் சிவிகையுமேகனிற்கும். (௯௬)

ஆறிரண்டிடததானின்ற வம்மனையாளர்சேம
யிறியவினையத்தானும் றேன்றிமதிக்கெட்டாகக்
கூறியமதிக்கெட்டோனுங் கூடாமல்வினையமாகிம்
சிறிபகரியநேகம் தேசமுமாளவல்லன். (௯௭)

ஈராறெட்டோரிருக்கிடத்தோரினவெலனுயிருக்கிலுமே
ஆராறெட்டிற்சுரிலதம்புலிதகவ்வினையமாறெட்டோர்
வேறுக்குறியோறெட்டில்வெருணனின்றுராமாகிற்
பேராயுடனேசிவிகையுமாய்ப் பெலத்தசேசத்ததிகனுமாம். (௯௮)

நாலுநாலிடத்தானின்ற நசரவனஸ்தமிக்க
ஏனுளமதிகெட்டோனுமிருந்திடசேனைடே
மேலுகதன்றிலின்ற வினையமாகானுமெட்டிற்
சேல்விழிக்கணனிறுள செம்பிகையோகமென்றே. (௯௯)

ஆட்சிவீடதர்க்குகேந்திர கோணமோடதிகலாபம்
மாட்சியாய்னிக்கவிந்த மன்னவரேழுபேரும
சேஷ்டனுபலனையானதி கெம்கோலுக்கதிகனவன்
சூட்சியாய்மறையோனசொன்ன சொற்றப்பாதிருக்குமாதே. (௱)

அரசனின்றிடத்தான்யோக காரகனுடனேசரச
சிரகதுவிடத்தானசந்திர் கேந்திரமானால்யோகம்
முரசொடெக்காளமூதி முன்னிற்குஞ்சிவிகையோகம்
விரசதிர்முலையாவீது வேந்தனுர்சொன்னநீதி. (௱௧)

வெள்ளியுமிருந்தவீட்டான் விடையுடன்கூடியிற்க
அள்ளியந்திடத்தான்சேமற் கதிகேந்திரமாகினின்றால
துள்ளியேசிவிகை * நேகந் துருமேகரிமாநேகம்
தெள்ளியேசேஷனுகித் தேசமேயாளவல்லன். (௱௨

* க, ஏகம் நேகம் எனத்திரிந்தது இஃது வடமொழிச்சந்தி அநேகம் எனப்பொருள்;

சந்திரனிருந்தவீட்டான் சுபமதாயரவுந்சேர
மந்திரியுதையோனந்த மனையவன்கூடினிற்க
இந்திருவோர்க்குங்கோண கேந்திரமாய்ப்பாமாக்க
சந்திரனுதையமாகிற் சத்திராமசேயாள்வன். (௱௰௩)

அரசனோடரவனிற்க வதர்க்கிளியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினிற்கச் சனியுமேயைங்காறாகிற
சிரசின்மேற்கிரீடனுகச் செகமுழுதாளவல்லன
நரகெஜதுரகங்கோடி நடக்குமேசிவிகையோகம். (௱௰௪)

செனித்தவன்சுங்கன்கூடிச் சேர்ந்துனின்றிட த்திரிபத்தில்
இனிக்குருசோமனவீட்டா னிருவருங்கூடினிற்கத்
தனித்தரவத்துநாலிற் றனியனுய்ச்சோமனிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வர்கோடி. (௱௰௫)

குறித்தவனரசன்கூடக் குருமதியிடத்தான்சுங்கன
மறந்தமீனரந்தினிற்க மனையவனுதையமாகச்
செனித்தவனரசன்வீட்டான் சோந்தரவத்துநாலில்
எதிர்த்திலர்னின்றாகி லீரழுபுவனமாள்வன். (௱௰௬)

பரித்திடஞ்சுங்கனிற்கப் பதியவன்பனையுமவீட்டான்
இனித்துயர்குருவுங்கூட விரப்பத்தினின்றாகிற்
குறித்துயர்சதிரஞ்சோம னொருவர்கூடாமனின்றாய்
செனித்தநாலாகத்தேச முழுதுமோர்குடைக்கீழாள்வன். (௱௰௭)

மதியாட்சியாகினிற்க மனைக்குநாலசுங்கன்பாம்பும்
பதியுதித்தனின்மந்திரி பதியுறனவர்க்கேநாலாய்
விதியுமோயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
குதிகொளுநப்பரிமாவேறுங் கொடிமன்னர்புடையேசூழ்வர். (௱௰௮)

உதையாதிபதியுமாட்சி யொருமையாய்நாலந்தேனும
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பந்தோனுட்சி யிருந்திடக்கூட்டமாக
யிதமிலாச்சிவிகைவாசன் முன்னிற்கச்செங்கோலாள்வன். (௱௰௯)

குறியுண்டவிடத்திற்புந்தி கூடவேசுங்கனுரும்
அறிவுடைசோமன்மந்திரி யவருமேலாபமாகிற்
பதியுண்டவிடத்தான்பாம்பும பத்தினின்மதிவீட்டானும்
செறிவுண்டுநின்றாகிற் செகமெலாமாள்வன்மாதே. (௱௨௰)

அரவுநின்றிடத்துக்கைந்திலமர்ந்திடமங்களுக்கும்
உரமதாயரவவிட்டா னொளிமதிசுங்களுறகும்
பரவுறுமவேகளுற்கு பக்கினினின்றுல்யோகம
துரகயபதாதிசேனை திரளணியுடையாய்வாழ்வன. (௱௨௧)

அரவுமமறையோர்கூட லலதுகேந்திரமாயிற்கப்
புரமதாயிருந்தவிட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராசிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே. ௱௨௨)

மறையோர்கேந்திரகோணத்தார் மதியினிடத்தானுதித்தோனும்
குறையொன்றில்லாச்சுகப்படினுங் கொடுக்கும்யோகம்பாம்பாகும்
உறையுற்றிருக்குமபாம்பினுக்கு லவர்க்கேந்திரகோணமாகில்
இறையொத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகையுடனே. (௱௨௩)

முடவனுக்காரொட்டில் முனிபிறைபுதனிருக்க
விடையிருந்தவிடத்துக் கதிர்சுனசேயாறெட்டாகிற்
குடையுடன்செங்கோலுண்டு கொத்தளகரிமாசேகம்
புடைகண்டுசூழ்வரென்று புண்ணியவியாழஞ்சொன்னார். (௱௨௪)

உரைத்ததுவியாழங்கொஞ்சந் திட்டமுமகேகமுண்டு.
திரத்திடலறியவேண்டிச் செகமெலாமுரைக்குநீதி
உரைத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்லமந்திரி
விரைத்ததுவிளையுங்கப்பா திருக்குமேயோகதிடம். (௱௨௫)

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
யுக்கவியதிலுதித்த வுபமதுதெரியாதார்க்கும
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ளபேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே. (௱௨௬)

அங்கொருமொழியைக்கொண்டு வாஸ்தியர்தமிழாற்செய்து
விந்தியபர்வதத்து மேலிடங்கீழ்தெற்கோர்க்கு
எங்கொருவருமேகாண வியம்பினவசனம்பற்றி
இங்கொருகுறியைச்சொல்ல விடையூறுவருவதில்லை. (௱௨௭

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்ததேமுகலாய்க்கொண்டு
அனைத்திவர்வினையமட்டி லவரவிருப்பறித்து
இனித்திருந்தவரைக்கண்டு விடர்குறிக்கமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுக்களுரு மியம்பியவசனந்தப்பா. (௱௨௮)

உதைப்பிறையதற்குமேருக் கொருபக்கநான்குபேரும்
சிதையாமன்றற்றோர்நான்கு பேருமோர்பக்கமாக
இதமாகவிருந்தாராகி லிவனுக்கோராஜயோகம்
பிதமிலாதிருப்பன்மேலாய் மேதினியுள்ளோர்க்கெல்லாம். (௩௨௯)

பிறைநின்றவிடத்துக்கேழுக் கொருபக்கநாலுபேரும்
நிறையன்றிநாலுபேர்மற் றொருபக்கநின்றாராகிக்
குறைவன்றிராஜயோகங் கொடுப்பரேபிதமில்லாமல்
அறையில்லைநிஜமேயுண்டா மம்புலிக்கணையமாதே. (௩௩௦)

சந்திரனிருந்தவீட்டா னிருந்தவராதர்க்கேழுமந்திரி
வந்தொருநாலிற்பாம்பு வலமிடமற்றோர்நிற்க
இந்திரப்பதிபோல்வாழ்வ னிவனுக்கோராசயோகம்
கொந்தளர்குழலினாளே குவலயமெங்குமாள்வன். (௩௩௧)

உதித்தவனிருப்பிடத்துக் கோர்மதியிடத்தானேழாக்
கதித்தவர்நின்றிடத்துக் கிருபக்கமற்றோராகப்
பதித்தவர்பாங்காய்நின்றாற் பாராளயோகமுண்டு
மதித்தொருவரையும்பாரா ராயினுஞ்செகமேயாள்வன (௩௩௨)

சுங்கனாராகின்மந்திரி யாகினுஞ்சுபமாய்நிற்க
அங்கவரிடத்துக்கேழுக் கிருபக்கமற்றோராகில்
எங்கணுமில்லாயோக மிவனுக்கேகொடுப்பர்கண்டாய்
செங்கரும்பனையமாதே செகமெலாமாளவல்லன். (௩௩௩)

பாம்புடனொருவன்சேர விருபுறமற்றோர்நிற்க
வீம்புடனுலகமெல்லாம் விண்ணதிராளுமயோகம்
சோம்பலில்கெசங்கள்கோடி துரகதங்கோடிசூழும்
காம்பிளமுலையினாளே கண்டிடுமிதுதப்பாதே. (௩௩௪)

அன்புள்ளவாசனிற்க வம்மனைக்கேழிற்புந்தி
நின்றிடமற்றோரெண்டு புரமதாய்நிற்கத்தானும்
பண்புளோனாகிராசர் பரவுறவநேகங்கோடி
நன்றுளமன்னனாகி நாடெலாமரசேயாள்வன். (௩௩௫)

சுக்கிரனிருந்தவீட்டான் சுக்கிரன்மகனுக்கேழில்
நிற்கவிங்கிவர்க்குமற்றோ ரிருபுறநின்றாராகில்
மெய்க்குறவாமிராச யோகமேயுளதாமேக
சக்கிரமாகவாழ்வன் சரசசங்கீதயோகி (௩௩௬)

அரசனோடரவநிற்க வம்மனைகாலேழெட்டிற்
சரசமாயிரண்டுவீட்டிற் சரியதாய்நின்றாராகில்
பரிசையோடநேகங்கோடி பரியுடன்சரியுமுண்டு
அரசியன்மார்தங்களை யாசாளயோகமுண்டே. (௱௬௭)

மதனின்றவிடத்துநான்கே ழெட்டினின்மற்றோர்நிற்க
விதம்போற்றில்லையோகம் வேண்டியசிவிகையுண்டு
சிதனுமிந்தடைவேயாகிற் செல்வமுங்கரிமாவுண்டு
புதனுக்கிப்படியேயானாற் பொற்சிங்காதனந்தானுண்டே. (௱௬௮)

இன்னம் ஒரு அடைவு.

சனித்தவர்க்கேழ்நாலெட்டிற் சேர்ந்துமுன்னிடத்தினிற்கத்
தனித்தொருநாளுமில்லான் றனக்கோடியகோணத்தின்
தொனித்தவரசேயாள்வன் றோன்றியமுதலாய்க்கொண்டு
முனித்தவர்சொன்னநீதி மொழிதப்பாதிருக்குமாதே. (௱௬௯)

பணைத்தொருவிடத்திலைந்து பேருமேகூடிநிற்க
இணைத்திருவில்லாமற்றோ ரெங்கனுமொருவராகில்
அணைத்தொருபரிதிசூழ்ந்த செகமெலாமாளும்யோகம்
கணைக்கொருமிதமில்லாமற் கண்டிடுங்கரியநேகம். (௱௭௰)

இருந்திடநாலுபேரு மினியவர்கூடநிற்கப்
பொருந்தியமற்றபேர்க ளிவர்க்குநாலாகிநின்றால்
அருங்கடலுருழுகின்ற வவனியையாளவல்லன்
நெருங்கிடவநேகங்கோடி நிர்க்கவேயரசேயாள்வன். (௱௭௧)

ஒருவிடமூன்றுபேரு மொருநான்கிலோரீரோரும்
இருந்திடவதர்க்குநாலி லினியவர்மூவர்நின்றாற்
பொருந்தியகுடைக்கீழாள்வன் போகதேவேந்திரனாகிக்
குருந்தடியிருந்தமாதே கொடுப்பதிப்படியாய்யோகம் (௱௭௨)

ஓரொருகிரகமாகி யொருநான்கினின்றாராகிற்
சீர்பதம்பெற்றுசெல்வஞ் செகச்சக்கிரவர்த்தியாவன்
ஈரிருகிரகமாக விந்தடைவாகிநின்றாற்
பார்பெருஞ்செல்வமுண்டு பாக்கியராசயோகம் (௱௭௩)

ஆறுபேர்கூடிநிற்க வதற்குநான்மற்றோர்நிற்க
மீறுபட்டொன்றுமில்லாமல் வெய்யலொளிதேசமெல்லாம்
பேருகொண்டுலகமெங்கும் பேருள்ளராசனாகி
ஆறுபட்டுலகையாண்டு ரண்பனுமிருப்பன்மாதே. (௱௭௪)

அரசிட்டமாகநின்ற வவ்விடம்வலத்தினல்ல
உரமுடன்சுக்கன்சோம னொளிமதிநின்றவிட்டான்
திரமுடனுதையத்தானுஞ் சேர்ந்திருப்பமாய்நின்றால்
முரசிடவநேகங்கோடி முன்னிற்கும்ராசயோகம். (௱௪௫)

அஞ்சவனரசன்சேர வவர்க்குமிக்கடையேயாகில்
மிஞ்சிடும்ராசயோக மிதமிலாச்சிவிகையுண்டு
பஞ்சவர்க்கரசனேழிற் பற்றியிக்கடையேயானால்
நஞ்சுதின்றவரைப்போல நாடெலாமாள்வன்மாதே (௱௪௬)

அஞ்சவற்கரசனலா யவர்க்குமிக்கடையேயாகில்
வஞ்சியேராசயோகம் வருவதுநிசமாயுண்டு
விஞ்சியேழுவீரோரு மிதைத்தேழுமைந்தாய்நின்றாற்
செஞ்சடைச்சிவனேயாகிச் செகமெலாமரசேயாள்வன். (௱௪௭)

அரவுடனரசனிற்க வவர்க்குமிக்கடையேயாகிற்
குறைவில்லாராசயோகங் கொடுப்பரேமிகமில்லாமல்
திரளுடன்யானைக்கூட்டந் தேடருஞ்சிவிகைமாவும்
அரசுடனநேகங்கோடி யவனுக்கேயுண்டுமாதே. (௱௪௮)

அஞ்சவனரசன்சோம னந்தனன்மதிவிட்டானும்
மிஞ்சியேயரவம்வேறேன் மிகைக்குமிக்கடையேயாகிற்
கொஞ்சியராசயோகங் கொடுப்பரிப்படியேகண்டாய்
வஞ்சியேயிந்தயோகம் வருமுயர்சுங்கநீதி. (௱௪௯)

அரசன்றனிலக்கினத்தா னல்வெள்ளிமதியும்விட்டான்
முரசதிரிடத்தான்ரெண்டு முப்பூன்றபேருநல்லோர்
பாவிதானிருக்கிற்கேந்திர கோணமாய்க்கூடப்பார்க்கில்
நரபதியானைமாவு நாடாளயோகமுண்டே. (௱௫௰)

பனிரண்டுவிடத்தினல்லோ ரிடமதிற்பணைத்துக்கூடி
அணைவுண்டுமற்றோர்க்கு மம்மனைக்கொருவராக
இனிகண்டுகூடிரெண்டு பேருமாய்நின்றாகிற்
குதிகொண்டசெல்வமுண்டு கொத்தளத்தானையுண்டே. (௱௫௧)

எந்தவீடாகினாலு மிடமதில்ரண்டுபேராய்
அந்தமாய்நின்றாகி லவனுக்கேயோகமுண்டு
இந்தடைவாகினின்றே ரிவரிவர்க்கைந்திராகிற்
செந்திருமாதேகேளாய் செகத்துக்கேமன்னனாவன். (௱௫௨)

கூட்டமாயைந்துபேருங் கூடியவிடத்தின்மற்றோர்
தேட்டமாயொருவராகத் திரண்டிரண்டாகிநிற்க
வாட்டமில்லாமன்மூன்றோ றாகினும்வருமேயோகம்
சேட்டமாயுலகையாண்டு செங்கோலுக்கதிபனாவன். (௱௫௩)

அஞ்சுநால்பேருங்கூட வவர்க்குமேபகையுமில்லைக்
கொஞ்சியேயையைந்தாகி யிவர்க்கொருபகையுமில்லை
வஞ்சியேயமிர்தம்போலப் பலனதுகொடுப்பர்கண்டாய்
வஞ்சியின்கொடியநாளே மகாராஜயோகமென்னே. (௱௫௪)

அணியோட்டுங்கேந்திரகோண மமர்ந்தவரிருந்தாராகிற்
பிணியோட்டுங்கிரகதோஷம் பிடிப்பதுமில்லைகண்டாய்
மணியோட்டுமரவம்வீறி மண்டலாதிபமேசெய்யும்
எணியோட்டுங்கிரகதோஷ மில்லையென்றுரைப்பாய்மாதே. (௱௫௫)

நாட்டமாயோகஞ்செல்வ நரகெஜவசுவயோகம்
ஓட்டமாய்வருவதற்கிங் குபமதுகேளாய்மாதே
கூட்டமுமணியுங்கேந்திர கோணமாய்நின்றாராகிற்
சேட்டமேயுடையோனாகிச் செகமெலாமாள்வன்றானே. (௱௫௬)

அஞ்சிட்டமஞ்சுபோர யரசுக்கிலாபமாக
மிஞ்சினோர்காலினிற்க வரசுடனரவனின்றால்
வஞ்சியேராசயோகம் வருமதுநிஜமேகண்டாய்
தஞ்சமாய்வேணசெல்வந் தழைத்துடனிருப்பன்மாதே. (௱௫௭)

அந்தணன்வேதமூர்த்தி யவ்வெள்ளிசொன்னநீதி
சந்தேகமில்லையோகந் தப்பாதுசெனித்தோர்க்கெல்லாம்
இந்துணர்வாகப்பார்த்தோ ரியம்பியவசனந்தப்பா
புந்தியுற்றிருப்பர்மாதே பூமியிலநேககாலம். (௱௫௮)

அந்தணன்மந்திரிசோம னவனிருந்திடும்வீட்டாறும்
உந்தொருவுதையத்தானு மோங்கியேயரவவீட்டார்
இந்தொருநவத்தோர்நன்மை யிவர்சுபங்கொடுப்பர்மேலாய்
சுந்தரிவரேயல்லாற் சொல்லவும்வேறேயில்லை. (௱௫௯)

அவயோகம்.

நீலனு மிரவிசேயு நிலமதிற்கெட்டோனபாம்பும்
மூலமாமுதையத்தெட்டோன் மூவிருவோரும்பொல்லார்
ஏலவார்குழலேகேளா யிவர்செய்யும்வாறேதென்னிற்
பாலனையுதித்திட்டாற்போல் பாக்கியங்கொடுக்கமாட்டார். (௱௬௰)

ஒருவிடநான்குமூன்று பெருமாயகூடிநிற்க
அருகிடத்தப்பாலொன்று மிரண்டப்பாலாகிநின்றால்
திருவிடுய்யோகந்தப்புஞ் செல்வமுநிலைமைதப்பும்
குருவிடமானசுகிகன் கொஞ்சியமொழிதப்பாதே. (௱௬௧)

கூட்டமாய்நின்றோர்முன்பின் கூடிரண்டொருவராக
நாட்டமாநின்றாராகி னகர்விடுப்பதிபோந்திறு
ஆட்டமாய்ச்செல்வங்குன்றிப் போமிறுயோகந்தப்பும்
சேட்டமுஞ்செல்வமில்லைச் செகத்துய்க்ககடினறுவன். (௱௬௨)

நாலொருகிரகங்கூட நடுமனைக்குள்ளோனாக
ஏலபிறியாமல்ரெண்டு பேருமாயெதிர்வொல்றுகிற்
பால்பெருஞ்செல்வங்குன்றிப் பாக்கியயோகந்தப்பும்
மால்பெருங்கண்ணினாளே மயங்குவனவயோகதந்தான். (௱௬௩)

அஞ்சனிலரண்டிர்ப்பாப ராஜனுக்கேழின்மந்தன்
மிஞ்சியேசுங்கனின்ற முன்மனைபின்பினவேபாபர்
கொஞ்சியேயாசனின்ற வதர்க்கிளமதியெட்டாகில்
வஞ்சியேசெல்வங்குன்றி வருத்தமேயோகந்தப்பும். (௱௬௪)

அஞ்சக்குசலின்மைமந்த னரசனுக்கேழிற்பூமன்
நஞ்சினுக்கிரவிநாலி னன்மதியினையாக
இன்சொர்க்கஞ்சரனைசூழ விரவியுநின்றாரகிற்
பஞ்சக்குளங்கிபோலப் பறந்துடன்போமேசெல்வம். (௱௬௫)

சுக்கனோர்சுபமிருக்கச் சுற்றியேபகையோராக
அங்கையோரைக்கோனில்ற வையமனைக்கேழின்மந்தன்
சிங்கம்போலரசனின்ற சிர்மனைக்கேழிற்செவ்வாய்
பொங்கமாய்நின்றாரகிற் போய்விடுமேசெல்வமெல்லாம். (௱௬௬)

அஞ்சவனின்றவிட்டுக் கல்விமையத்தில்ராசன்
கொஞ்சமாமதிவிட்டானுங் குறுகியேவிரையமாகத்
தஞ்சமேருதையத்தானுந் தனபதிக்கிறாராகில்
மிஞ்சவேயோகமில்லை யேலன்றிநிர்ப்பன்மாதே. (௱௬௭)

ஆறுளோன்குறைக்தோனாட்சி யய்யனைக்கிறாராக
வேறுபட்டவர்க்குமந்திம் விரையமாய்நிகர்க்கபற்றோர்
கூறுகொண்டெட்டுக்கெட்டாக் கூடமனின்றாராகில்
நூறுபட்டுலகமெல்லாந் துர்ச்சனயோகமாகும். (௱௬௮)

அரவமுஞ்சனியுங்கூட வந்தணைனிரவிசேர
உரமுடன்சுங்கன்செவ்வா யொருவருக்கொருவரெட்டாய்க்
குறையுறமதியும்புந்தி கூடியேநிற்குமாகில்
முறையுடன்போமேசெல்வ மொய்க்குழன்மானேகேளாய். (௱௬௯)

சனியுடனாரனிற்கச் சந்திரனுடனேபுந்தி
முனியுடன்பாம்புஞ்செவ்வாய் முழுகதிர்கூடநிற்க
இனியிவாநின்றிடத்துக் கிருப்பிடமாரெட்டாகில்
தனியனாய்நிற்பன்யோகந் தவிர்ந்திடுந்தரித்திரயோகம். (௱௭௰)

மந்தனுஞ்செவ்வாய்கூடி மதிக்கேழில்வந்துநிற்கத்
தொந்தமாயிரவிபாம்பு தொடுத்துநாலிவர்க்கேயாக
அந்தமாய்வெள்ளிபொன்னு மம்புலிக்காரெட்டாகில்
எந்தனாளாகிலுந்தா னிவனுக்கேயோகமில்லை. (௱௭௧)

அணைத்திருகோணகேந்திர மமர்ந்துநாலைந்துகூட்டம்
பணைத்துமிந்தடைவேநின்றார் பாக்கியவானேயல்ல
இணைத்திருவொன்றிரண்டு மிருந்திடில்யோகமில்லை
பிணைத்துமூன்றொன்றிரண்டு மிருந்திடிற்பிழைப்பேயில்லை. (௱௭௨)

ஒருவிடமொருவனாய்மற் றொருவிடமிருபேர்நிற்கத்
திருவில்பின்னொருவனாகி திரும்பவேமூன்றுபேரும்
அருகில்பின்னொருவனாகி லவனுக்கேயோகமில்லை
மருவுநண்சுரைத்தார்சுங்கன் மானிடரறியவேண்டி. (௱௭௩)

சிவிகையோகம்.

சந்திரவிலக்கினாகி சதிர்கோணமுதித்திட்டாலும்
வந்தெதிர்கூடினாலும் வலமிடத்திரிநாலைந்தாய்
கொந்தலர்குழலினாளே குலவியேநின்றாராகில்
இந்திரப்பதிபோல்வாழ்ந்திங் கிருப்பனேவயதுநூறாய். (௱௭௪)

இந்திரநால்வருக்கு மிடர்குறையிருக்கலாகா
அந்தொருமதுயுமீன மமருமிருக்கலாகா
வந்தொருநான்கிற்சந்திரன் வளர்ந்துச்சவமிசையாகிற்
செந்தூரநுதலினாளே மிகுதியாய்ச்சிவிகையுண்டே. (௱௭௫)

உதித்தலக்கினத்தான்விற லுயர்மதியிடத்தானட்பாய்க்
கதிக்கிவரேழுக்கேழாய்க் கடந்துடனாலைந்தாகி
எதிர்த்துடன்குருசுக்கற்கு மிதுநிலையாகிநின்றால்
விதித்திடமுன் பேபின்பு வேண்டிடசிவிகையேறும். (௱௭௬)

அரசர்க்குஞ்சுங்கனுற்கு மதுகுறியாகிநிற்க
முரசொத்துமதியுங்கூடி முன்பவருடனேசேர
இரவியத்துடனேகாரி யிவருடன்சேய்பார்ப்பின்றேல்
விரசமுற்றுடையமாதே வேண்டியசெசங்களுண்டே. (௱௭௭)

ஆயுரியோகம்.

முன்னொத்துவரவுமற்றோர் முன்போலக்குறியாய்நிற்க
அன்பதோடாறுஞ்சேர மகண்டசாம்பிராஜ்யயோகம்
கொண்டொத்தராஜராஜர் கூர்ந்துதைக்குப்பினிற்பார்
மின்னொத்தவிடையினுளே மிகயோகஞ்சங்கநீதி. (௱௭௮)

சுங்கனோடரவமற்றோர் சூழ்கின்றகுறிபோனிற்க
எங்கணுமரசர்கூட்ட மிவனைப்பேதொடர்ந்துநிற்பார்
செங்கருவான்போற்கூடி செகயோகபோகபாக்கியம்
அங்குறுமரசர்சூழ்வுற றவர்க்குவன்மூர்த்தியாவன். (௱௭௯)

உதித்திடமிடத்தோன்லாப மதியிடனதர்க்கிலாபம்
பதித்திடவரவம்பொன்னும் பருவெள்ளியிருந்தவிட்டார்
குதித்துடனிவர்க்கிலாபங் கூடாமற்றனியராகில்
விதித்திடவபதுநாளும் விணனுலகெங்குமாள்வன். (௱௮௦)

ஆட்சிவீடதற்கிலாப மவரவர்நின்றாராகிற்
காட்சிதந்தானோர்போலக் கனசெல்வமிகுதியுண்டு
தாட்சியின்றதற்குளுச்சந் தானிருப்பாரேயாகிற்
சாட்சியாபரந்தஞ்செல்வந் தழைத்திடுஞ்சிவிகையோகம்: (௱௮௧)

அரவமேநின்றவீட்டுக் காகும்லாபத்தின்மந்திரி
உரமுள்ளசுங்கன்பாம்புக் கொருமூன்றினிற்கத்தானும்
சிரமதன்பாம்புக்கேழிற் செல்வனுநின்றானால்
தரகதகெஜமாந்தோளி யோகமாய்ச்சொல்வர்மாதே. (௱௮௨)

நிறைமதியதற்குமற்றோர் நிற்கவேலாபமாக
அறையதிற்கூடிநில்லா தவர்க்கவர்லாபமாகக்
குறைவின்றிநின்றாராகிற் கொடுப்பரேயமிர்தயோகம்
பிறையுயர்ந்ததும்பாற்செல்வம் பெலக்குமென்றிருகுசொன்னார், ()

கெண்டயோகம்.

அணியிருகூட்டகேந்திர மயர்த்தியந்திரிகோணத்தும்
துணிந்திருந்தோர்கள்பாப ராயினுஞ்சுகமேயிசைவே
பணியணியிடையினுளே பற்றுதசெல்வமுண்டு
பணிபரவுஞ்சோரயாகின் மாண்டிடுங்குபுவிதானே. (௱௮௪)

சந்திரனிருப்பிடத்துச் சரியிருபுறமாய்ப்பாபர்
முந்திபின்னிருவர்கூடி முகங்கெட்டிலரவனின்றில்
இந்திரப்பதியானாலு மிறந்திடும்பாக்கியனில்லாக்
கொந்தலர்குழலினாளே குழவியுமன்றேசாமே. (௱௮௫)

உதையமிந்தடைவேயாகிற் சிதையுமே குழவிதானும்
அதையதாலுதையோனாகி யம்புலிவீட்டானாகி
இதையுடனிருந்தாராகி லெமகண்டயோகமென்று
புதைபொருட்செல்வமெல்லாம் போய்விடுங்குழவிகூட. (௱௮௬)

அருக்கனார்மந்தன்சேயு மவ்விடம்பாம்புநிற்க
குருநிலம்வெள்ளிபுந்தி கூடாமலாறெட்டாகில்
இருக்கவேபாக்கியமில்லை யிவன்பிறந்தவ்விடத்திற்
செருக்களம்போலேபிள்ளை சேர்ந்திடுமெமபுரத்தே. (௱௮௭)

மந்தனும்பாம்புங்கூட மனைக்குநாடொளிசேயும்
தொந்தமாய்நிற்கமற்றோர் சுபருமேயாறெட்டாகில்
செந்திடத்தனும்பாக்கியஞ் செல்வமுநாசமாகும்
பொந்திடக்கிலேசனாகிப் போகுமன்றிரவுநில்லா. (௱௮௮)

இந்திடவணியேயாக வெந்தவீடுதையமாகில்
வந்திடுந்தீம்புண்டாகும் வலமிடமாகினுந்தான்
தொந்திடுமாட்சியுசச மாகினுமோங்காடுண்டு
சிந்திடுஞ்செல்வமெல்லாஞ் செலவழிந்துயிரிழக்கும். (௱௮௯)

பாப்பருஞ்சுபர்கூடிப் பற்றியேயணியாய்நிற்கக்
கார்ப்புடனுதையமந்தன் கனல்புந்திசுங்கன்கூட
நேர்ப்புடன்செவ்வாய்பாம்பு நிலவுபொன்னணியேயாகில்
சீர்ப்பெறவுதித்தகாளை செத்திடுமிரவுநில்லா (௱௯௰)

ஆறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
சுறுமோராறுக்காறி லிருந்திடவிரவிபாம்பும்
ஓராறுக்காறுமூன்றி லொருவனுய்ப்பூமனிற்கப்
போராறுக்கேழுமுண்மற்றோ ரிருந்திடிற்குழவிசாமே. (௱௯௧)

ஓரெட்டிற்கெட்டிக்காரி பொருமையாம்பாம்புசேர
வெட்டிற்கெட்டில்ராஜ னிரவியும்புந்திகூட
சீரெட்டிற்கெட்டிர்ச்சேமன் முடிகியேசெவ்வாய்கூட
நாலெட்டிக்கெட்டிர்ச்சுங்க னசமாய்க்குழவிசாமே. (௱௯௨)

இரவிக்கோரெட்டோனின்ற விம்மனையுதையமாக
அரவுக்கோரெட்டோனின்ற வம்மனையிரவியாகப்
பரவியமதிக்கெட்டோனும் பண்புள்ளவுதையத்தெட்டோன்
உரமுடன்சோமன்கூடி லோரிரவதனிற்சாமே. (௱௯௫)

கூடியவிருவர்முன்னே கூடாமலொருவனிற்கத்
தேடியவதற்குமுன்னே செப்புமோரிருவர்நிற்க
நாடிமுன்னொருவனின்றா னலமில்லைபிறந்தபின்னை
ஆடிடுமதற்குமுன்னே யறுதியாமெமபுரத்தே. (௱௯௬)

திங்கள்பின்முன்னிரண்டு பாபருந்திரண்டுநிற்க
மங்களவானேமுந்த மனைக்குநான்மர்த்தகை
அங்குளசுபருமற்றோர்க் காரெட்டுபனிரெண்டாகில்
எங்குளமாத்ருவமச மிறக்குமேகுழவிகூட. (௱௯௭)

சோமனுக்கேழிற்செவ்வாய் நாலிருபுறமும்பாபர்
ஆமெனுமலரியோடே யந்தநாலோனுங்கூடக்
காமனுக்காரின்மன்ன னுதையவானெட்டினின்ற
சாமெனுங்குழவிமாதா சரியன்றேயிரவுமட்டில், (௱௯௮)

நாலுநால்செவ்வாய்நிற்க நடுவதிற்சோமனந்தன்
மேலுகந்தரசன்சுங்கன் மேலென்றியன்றமிக்கில்
ஏலுடனுதையத்தானு மிராப்பகைவிட்டானெட்டில்
ஆலுகந்தமர்ந்தமாதே யன்னையுங்குழவிசாமே. (௱௯௯)

முந்தியோருதையத்தானு முழுமிறையிடத்தனெட்டோன்
பிந்தியேசனியும்விட்டான் பெலவினமாகநல்லோர்
வந்திருந்தன்றேற்பார்வை வலமிடத்தில்லாதாகிற்
சந்தேகமில்லைசாவு சரியிதுவிதியம்மட்டே. (௱௯௰)

எந்தொருவீட்டாராகி யிடவரவர்க்குண்டேயாகில்
அந்தொருவிடமுந்தீதா மதற்குகாரகருந்தீதே
நொந்திருந்தனரோயாகி நோக்காடுமேநிகமுண்டு
செந்திருவனையும்பற்றுஞ் செகத்துதித்தோர்க்குச்சொல்லே ()

ஒருவருக்கொருவர்கேந்திர கோணமுமணியாய்க்கூட்டம்
இருவராய்க்கூடிக்கேந்திர கோணமுமணியாய்க்கூட
திருகுளோராகிக்கேந்திர கோணமுமணியாய்நிற்க
வருவதுநன்மைத்தமை வயணமிக்கறிந்துசொல்லே. (௨௱)

நாலுபேர்கூடிகேந்திர கோணமுமணியாய்க்கூட
ஏலுடன்சுங்கன்கூடி யிவர்க்குநால்கோணமாகில்
ஆலுசந்தானுங்கூடி யிவர்க்குநாலைந்தேயாகச்
சேலுடனேழுபேருஞ் சேர்ந்திருந்தனரேயாகில். (உ௱க)

தன்பதியுடையனவன் றனலாபமதிகமுண்டு
மனையதிலசுவமுண்டு மகிழ்ச்சியுஞ்சிவிகையுண்டு
பொனின்பதிக்கதிகனாகிப் பொற்சிங்காதனமுமுண்டு
இனிப்பதுமுடையோனாகி யிருப்பனேவயதுநூறாய். (உ௱உ)

இந்தனிகோணகேந்திர கூட்டமுமிருப்புந்தப்பி
அந்தணன்றிகைத்துநிற்க வவகேடுமுடனேயுண்டு
நொந்துடனிருப்பநூறு வயதுடன்றனிலேலாபம்
வந்திடிற்சநியேயாக வாகனயோகமில்லை. (உ௱௩)

ஒருரெண்டுமொன்றுமூன்று யொன்றொன்றாய்நிற்கவன்றி
இருவொன்றுமூன்றொன்றாக விருக்கவுமன்றிப்பின்பு
திரியொன்றுமொன்றிரண்டா யொன்றாகவிருந்தாராகில்
நெறியுண்டகஷ்டமுண்டு நின்றநாட்டுயரமுண்டே. (உ௱ச)

ஒன்றொன்றுமூன்றிரண்டு மொன்றொன்றால்நிற்கவன்றிப்
பின்னொன்றுமூன்றிரண்டு பின்னிரண்டொன்றாய்நிற்க
அன்றன்றிமூன்றொன்றிரண்டு மொன்றிரண்டணுகிநின்றால்
அன்றுறுஞ்செல்வமல்லா லதிகமாய்ச்செல்வமில்லை. (உ௱௫)

இருக்கவேநால்வர்கூடி யதற்கிருபக்கமூவர்
நெருக்கமாய்நிற்கமற்றோர் நின்றிடவொருவராகச்
செருக்கவுஞ்செல்வமில்லை சென்மசீதளனாய்நிற்பன்
பெருக்கவேயோகமில்லைப் பெலனுண்டாமாயுள்யோகம். ( )

ஒன்றிரண்டொன்றிரண்டா யோரொருவிடமாய்மற்றோர்
னின்றிடவொன்றுக்கொன்று நேரிலாறெட்டாகிற்
கொன்றிடுஞ்செல்வமெல்லாங் குடியதமாகச்செய்யும்
சான்றுடன்சுங்கன்சொன்ன திருமொழிதப்பாமாதே. (உ௱௭)

ஆறிடமதினின்றாறு பேருமேயணியாய்நிற்க
வேறுமற்றோருனின்று விடத்துக்கேயாறெட்டாகில்
நீறுபட்டதுபோற்செல்வ நில்லாமற்குடிவிட்டோடும்
வேறுபட்டுலகமெல்லாம் வெருண்டிடத்திரிவன்றானே. (உ௱அ)

ரெண்டுமொன்றென் றிரண்டு மற்றுளோரிலர்க்கிரண்டாய்க்
கொண்டுநின் றிடமுந்திரதாய்க் குறியதாயின்றாராகிற்
கண்டிடுமநேகங்குற்றங் கலங்கியேபொருளும்போகும்
அண்டியவிடமுந்தப்பி யவதியும்வயதுமற்பம். (உ௱௯)

கூடிநின் றிடத்துமற்றோர் குறிதப்பியாறெட்டாக
ஆடியேயாட்சியுச்ச பாகினுமாதேகேளாய்
தேடியசெல்வமெல்லாஞ் சிதறிடுமிடமுந்தப்பி
வாடியேநிற்பன்கண்டாய் வயதுமேயற்பமாக. (உ௱௰)

உண்டிரண்டொன்றுமொன்று மொருநின்றிடமற்றோரெட்டாய்
கண்டிடவாட்சியுச்சங் கருதிலாகலமாறுமபக்
அண்டியேபொருளுமன்போ மவதியுங்கெடுதியுண்டு
கொண்டபோர்நிலைமைதப்பிக் குறிநிதுவயதுமற்பம். (உ௱௧௧)

செல்வராய்க்கேந்திரகோணஞ் சேர்ந்துநின்றவரியுமாகில்
அல்லவராட்சியுச்ச மாகினுமாதேகேளாய்
எல்லவாகலமாறு மெட்டாறுமாகநின்றாற்
பொல்லவராகச்செல்வம் போய்விடும்வயதுமற்பம். (உ௱௧௨)

மதிபதியதற்குக்கேந்திர கோணமரியாகநின்றிங்
கதிபதியுச்சமட்டு பாகினுமாதேகேளாய்
பதியவர்க்கொன்றுக்கொன்று பகைத்துமாறெட்டேயாகில்
விதியதுகுறைந்துசெல்வம் விரைவிலேகுலைந்துபோமே. (உ௱௧௩)

ஒன்றிரண்டொன்றுமூன்று மொன்றுமாய்நிற்கக்குற்றம்
என்றுள்ளசுகமுந்தப்பி யிருப்பிடமிலையுங்குற்றம்
நன்றுள்ளதைவாழ்ந்த நலங்குன்றிக்கஷ்டமாகி
நின்றுடன்றிவன்றனை நிலையிதுகுறிதப்பாதே. (உ௱௧௪)

சூரியன்மதனைசேமையர் சூழ்ந்திருபுறத்திலப்பற்றோர்
சாரியராகநிற்கச் சாவதுமுடனேயுண்டு
வீரியர்கிவ்வடைவேயாகில் வேண்டியபோகமுண்டு
பாரிவையுற்றுக்கொண்டு பாருளோர்க்குமாய்ப்பாய்மாதே. ()

எட்டணியாறுமாக விருந்திடிற்செல்வமில்லை
மட்டிலிவெட்டாறாக மனையவர்நின்றாராகில்
விட்டுபோமுரிலா விரைவிலேகளமும்போகும்
தொட்டதையாயற்செல்வந் தூரமேபோந்குமாதே. (உ௱௧௬)

கெடுதியாயுதையம்பாபர் கிட்டியேனாலாறுக
அறுதியாய்நல்லோர்சிற்கு மவரவர்க்காறெட்டாகிற்
படுதியாய்ப்பட்டாற்போலப் பறந்திடுஞ்செல்வமெல்லாம்
பிரிதியாயுதித்தக்காலை பெயர்ந்தெழுமெமபுறத்தே. (உகஎ)

மதியுடன்புந்திசேர பந்தனோடரசனிற்க
விதியுடனிரவிசுங்கன் வேந்தனுக்கெட்டிற்பூமன்
கதிபெறப்பாம்புகூடக் கலந்துடன்பூமனின்றால்
அதிபதியோகமில்லை யவனுக்கேவாதுமற்பம். (உகஅ)

செல்வமாய்கேந்திரகோணத் தாருமேசுகமாயிற்க
அல்லவென்றாட்சியுச்ச மாகிலுமேலாயிற்க
நல்லவராகினுலு நான்குபேர்வக்கிரமாகிற்
சொல்லவுஞ்சுகமேயில்லை தோன்றிமெரிட்டமாதே. (உககூ)

கூட்டமுமணியுமாகிக் குறைந்துனின்றவருமேலாய்ந்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஒட்டமாய்த்திரும்பிநன்றே ரொருநான்குபேருமாகிற்
செட்டமேயில்லைகேளாய் சிவனுக்கழிவுமாதே. (உஉய)

அல்லவென்றணியுங்கூட்ட மதிகேந்திரகோணமாகில்
நல்லவராகிநிற்க நான்குபேரமிசைநீசம்
சொல்லிவரங்கிசாதி துன்பநீசரன்குமாகிற்
பொல்லதுவருமேகூடப் போய்விடுஞ்செல்வமெல்லாம். (உஉக)

இன்பமாமணியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்பதாய்நின்றாராகி லதிநான்குபேருநீசம்
தன்பதமாகினின்றோ ரங்கிசமதுவேயானால்
துன்பமாயாயுள்செல்வஞ் சொல்வதுமற்பமாமே. (உஉஉ)

அல்லவேநான்குபேரு மதிபகையாகினிற்ற
னில்லுமவ்வீட்டார்தாமு நீசமுடாள்தாமாகிற்
செல்வராய்க்கேந்திரகோணஞ் சேர்ந்தனியிருந்திட்டாலும்
நல்லவர்போலனின்று நாசமேபுரிவர்பாதே. (உஉங)

கூட்டமுமணியுமாகிக் குறைத்துநின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுஞ் சிருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பினின்றோ ரொருநான்குபேருமாகிற்
சேட்டமேயில்லைகேளாய் சிவனுக்கழிவுமாதே. (உஉச)

அல்லவென் றணியுங்கூட்ட மதிக்கேந்திரகோணமாகி
கல்லவராதிநிற்க நான்குபேரமிசைநீசம்
சொல்லிவாங்கிசாதி துன்பநீசாஸ்திரமாகிற்
பொல்லதுவருமே கூடப் போய்விடுஞ்செல்வமெல்லாம். (௨௨௫)

இன்பமாயனியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்பதாய்நின்றுராகி லதிலைன்குபேருநீசம்
அன்பதமாகிநின்றே ரங்கிசமதுமேயாகில்
துன்பமாயாயுள்செல்வஞ் சுபமதுமற்பமாமே. (௨௨௬)

பிரதியோககாண்டம் முற்றிற்று ஆக-௲௨௬.

ஆயுள் காண்டம்.

—:():—

தீர்க்காயுள்.

இப்படியனேகங்கோடி யென்றென்றுபொருள்களுண்டு
மெய்ப்படகங்களீதி மேதினியோர்க்குக்கிட்டா
தெப்படியென்னிற்கேளா யெடுத்தோதுமாறுனைக்குர்.
சொற்படுஞ்சுங்கன்ருட்சிர் சோதித்துச்சொல்வாய்மாதே. (௧)

சொல்லுவர்பெரியோராவர் தோன்றிடுமவரோதெய்வம்
அல்லொடுபகலுமாக வதிலுடைர்சாரங்கண்டு
ஒல்லுமோர்வேதமூர்த்தி யுரைத்ததென்றறியலாகும்
செல்லுமேதேசமெல்லாஞ் செகச்சோதியாகநிற்பன். (௨)

அஷ்டமவிடத்தான்பந்தன் றைட்சியிற்கடகால்வர்
திட்டமாய்க்கூடிநின்ற திங்களுமதிலேநிற்க
நட்டமில்லாமன்மற்றோர் நாலுநாளாகிநின்றர்
பொட்டெனவயதுண்டாகிப் போய்விடுந்தரித்திரங்கள் (௩)

பந்தனும்புந்திசுங்கன் பதிவிட்டாறுடையத்தோனும்
அந்தமாய்க்கூடமற்றோ ரவர்க்குநாலந்தோமாகில்
தொந்தமாய்ச்செல்வமுண்டு தொன்னூறுப்பத்துங்கண்டு
வந்தநாண்முதலாய்க்கொண்டு வளர்ந்துடன்பாக்யமுண்டே. ( )

எட்டவன்புந்திசுங்க னிந்துவுமுடையத்தானும்
பட்டினிற்கூடிநிற்க பனையவர்க்காட்சியாகச்
சட்டெனமற்றோர்நின்ற சரிபிருபுறமாய்ச்சேர்ந்தாற்
பொட்டெனவயதுண்டாகும் புகலருஞ்செல்வமுண்டே. (௫)

எட்டினிலெட்டோற் றிருபுரஞ்சரியாய்ச்சேர
இட்டிடும்பிறகசெல்வ மெதிர்க்கரையோகமுண்டு
விட்டிடா திருக்குநாளு விண்ணவர்க்கதிகனாகிக்
கட்டுடன்வாழ்வன்கண்டாய் கருமுகில்வண்ணன்போல. (௬)

பந்தனுமாட்சியாய்ப் பத்தினிருபுதாயனிற்க
முந்தவோர்பந்தனுக்கு முன்மனையரிசையாக
இந்தவாகினின்று ளிலனுக்கெய்யதுநாளு
சொந்தமாய்ச்செல்வமுண்டு தொல்புவிமேவார்க்குமாதே. (௭)

சரிபிடபதனினின்றே பொருளாய்கூடிநிற்க
அரிபிடமகனுங்கூட வவர்க்குநான்மற்றோராக
எரிபிடாகனுமாட்சி யதிகையிலிருந்தானாகிற்
பரிபிடச்செல்வமுண்டு பார்தனில்வைத்துநாளே. (௮)

செங்கருநீலனின்ற சிரமனைக்காறெட்டில்
கங்கணர்புந்திபொன்னுஞ் சுபாதாயிருக்கமற்றோர்
எங்கனுமிருந்தாராகி லிலனுக்கெயதுநாளு
குங்குமம்பையாமாதே குறிப்பிதுநெறிதப்பாதே. (௯)

பட்டுடனெட்டுவிட்டா னிவருடனரசன்றங்கன்
பொட்டுடனாறிபுரந்தன் புகுந்தொருவிடத்திலின்றால்
விட்டிடாதிருக்குஞ்செல்வ மேதினியிருப்பனாகும்
மட்டிடாசெல்வமுண்டு மதிசைதாரகமேயாகம் (௰)

சேர்ந்திருவோருங்கூடச் சென்மநாலெட்டோயாகப்
பூந்தவர்க்கொருகாலாகப் புன்னையிருக்குமந்தன்
சார்ந்துனின்றிடத்தானாகிற் சநவும்பொன்றங்கனுமில்
ஏந்துபொன்செல்வனாகி யிருப்பனேவையதுநாளும். (௰௧)

இருந்திடமந்தனோடே யிருவருங்கூடிநிற்கப்
பொருந்திவர்க்கைந்திற்கைந்திற் பொய்ம்முன்றுபோயினிற்கத்
திருமிதிநாளையின்று தனபாக்கியமுடையனாவன்
செருப்பவழிதழின்மாதே செப்பினான்சங்கன்றானே. (௰௨)

மூனுபேருடனேபந்தன் முதல்வனுகிவிற்கப்
பூவிரண்டொன்றுய்மற்றைப் புன்னியனின்றாகிற்
காணும்பசெல்வமிஞ்சிக் கனக்கவேவாழ்வன்மாதே
ஆணுடன்பெண்ணும்பெற்றிங் கவனுறவாதிருப்பன். (௰௩)

மகரக்குப் பத்தின் மந்தன் மழிசேவமிசையன்றி
உயருச்சவமிசையாகி யோங்கியே நின்றாராகில்
சிதரமொத்ததுபோற் செல்வஞ் சேர்ந்துநின் றுலகில்வாழ்வர்
விபரமுற் றுடையனாகி மேதினி யிருப்பனாமாய். (௰௪)

நீலனு முச்சமாக நில்லதுவாட்சியாகி
மேலெனு மாசனங்க ளிவர்க்குமே நாலாய்நின்றால்
பால்பெருஞ் செல்வமுண்டு பாக்கியவானுமாக
எல்பெரும் யோகமுண்டிங் கிவனுக்கே வயது நூறு (௰௫)

ஆறிரண் டிடத்தான் மந்த னுங்கொடுத் தானுண்டாம்
ஏழுமற்றிறுபேரு மிவர்க்கவர் சுபயோகில்
வீறுமேயோகர்பற்றி னின்றமைவார்க்கதிகனுகள்
பேறுமோ ராதிகனுமிப் பெரியவனுவாறாய். (௰௬)

கூடியேயிருந்திட்டாலுங் கோணமாய் நின்றிட்டாலும்
நாடியே யமரியாய் நின்று நல்லுச்சவமிசையாகில்
ஓடியே வருமேயோக பொளித்துநின் றனைசந்திட்டாலும்
தேடியே பிடிக்குஞ் செல்வந் திருப்பமே வயது நூறாய். (௰௭)

உதித்தவன் சோமன் விட்டானே தொட்டானில்லனுகும்
சுதித்தவனிருந்துவிட்டான் கனகமுடையானுமாகும்
ஒருத்தருக்கொருத்தர் தானப மில்லையா யுறமையாகில்
விதித்ததுவயது நூறு வின்னுமோ ரறியத்தானே (௰௮)

சனிக்கெட்டிற் பாபரில்லார் சனிப்பிலார் கூடப்பார்க்க
இனிமட்டிலவர்க்குநாலா மிருந்திடப் பாபமன்றி
செனித்திட்ட செட்டுக்கெட்டிற் சிதனனின்றனாகில்
செனித்திட்டுவரு மோர்பாலன் சிரஞ்சீவியாக நிற்பான் (௰௯)

எட்டுடனெட்டினிற்க விருபக்கந் தங்கள் ராஜன்
விட்டிடனுதயஞ் சோமனை வெள்ளிக்கோ ராகினிற்க
மட்டுடன் சனிக்கு நாலின் மண்ணகனிருவியன்றி
கட்டுடனுதித்தகாளை கண்டிடா தெமபுரத்தே (௨௰)

விறுமோர் சனிக்குநாலில் வெண்கதிர் பூரணில்லார்
மாறுமுக்கோணர் கேந்திர மதிமேசகடாமின்றி
ஆறுமிக்காதிரண்டோ னவன் சுபயோனுன்மாந்த
நூறுவட்டிருப்பனென்று நவதரவர் நல்லவல்லோர். (௨௰௧)

நாலுகேந்திரத்துமன்னர் நலமாய்முக்கோணஞ்சேர
ஏலுகந்திருக்குநீல னிவர்க்கேழிற்றீயோரில்லா
மேலுகந்தனத்தோன்மீறி மேருவிலெட்டோனானால்
ஆலுகந்தமாந்தமாதே வயனூறுவயதுள்ளோனும் (உஉ)

கதிக்கொருவீனமில்லாக் கனலவன்பார்வையின்றி
மறுத்தொருவக்கிரமின்றி மன்னவன்பார்வையாகிக்
குறித்திருவுடனேசோமன் கூடவேயுதையனிற்கப்
பறித்தவர்க்கெட்டுக்கெட்டோன் பருநலமானாலூறே (உ௩)

பதிமதிவிதியுநல்ல பாபரங்கிசமேயாக
விதிமதியின்னிடத்தா ரிவருமேசுபரேசேர
விதிமதிபதிக்கோணவில் வெய்யவன்பூமனிற்கிற்
கதிபதிமாதேகேளாய் சஞ்சீவிச்சிலைபோலாமே (உச)

நீலனுக்கெட்டிற்பூப னிறைமதிக்கெட்டிற்புந்தி
காலற்கிராறிற்றீயுங் காமனுக்கொருநான்வேந்தன்
நூலனுக்குதையமாக் நோயிலாதிருந்தாராகிற்
பாலனுக்கொருநூராகம் படருமேயாயுர்யோகம் (உ௫)

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கஞ்சுபரேறிற்க
மட்டில்லாச்சனிக்கேழ்நாலின் மன்னவன்வெள்ளினிற்க
விட்டிடாப்பிறையுயர்ந்து வெய்யவற்காறிலாகி
இட்டமாயிருக்கிற்காளை யிருப்பனேவயதுநூறும் (உசு)

அற்பாயுள்

விதிபதிநீசமின்றி வெய்யவன்கூடப்பார்க்க
அதின்மதிகுன்றினிற்க வதற்குநால்சனியேபுந்தி
மதியதின்குருநோக்கில்லா மந்தனும்வெள்ளிகூடிற்
சுதிபதிமாதேகேளாய் சாவதிங்குடனேயுண்டு (உஎ)

உதையத்துக்கெட்டின்மந்த னொருவனாய்நிற்கத்தானும்
மதிபத்துக்கெட்டிற்பூமன் மன்னவரிவர்க்கேழாக
அதையொத்துவிரவினின்றுங் கதற்கேழ்நான்மந்தனாகில்
விதியற்றுணியில்லாதாகி வினையுமேதீம்பாய்மாதே (உஅ)

உதித்தெட்டுக்கெட்டின்மந்த னாரகனுமிரவினிற்க
மதித்தெட்டுக்கெட்டினல்ல மன்னவர்பூமன்சேரக்
கதித்திட்டுசுங்கன்புந்தி காணவுமில்லாதாகில்
விதித்தெட்டுநாளுனில்லா வினையுமேதீம்பாயமாதே (உகூ)

அருக்கனுக்கெட்டோன்மந்த னமர்ந்திடவுதையம்பூமன்
இருக்கவுமிவனைநல்லோ ரின்பமாய்ப்பாரராகிற்
பருக்கவேசோமனின்றிப் பாம்புடனின்றாராகில்
உருக்கமாயுதித்தகாளை யொருநாளுமில்லாமாதே. (௩௰)

நீலனார்தனக்குநான்கி னின்றிடவாரற்றானும்
கோலமாய்த்திரியர்நின்ற குடிமனையதற்குநான்காய்ப்
பாலராய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவேகூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுமில்லா. (௩௧)

ஒன்பதுபேருநின்ற நிலையதிலொருமையில்லாத்
துன்பமாயெட்டுக்கெட்டாய்த் தோன்றியேநின்றாராகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கினுந்தீமையாகும
நன்பலங்கொடுப்பதில்லை நட்டமாமுதித்தகாளை. (௩௨)

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின்புநால்வர்நிற்கச்
சாட்சியாய்கேந்திரகோணஞ் சரியவர்நின்றிட்டாலும்
மோட்சமுண்டென்றுதானே மொழிகின்றவாறுதப்பாச்
சாட்சியாய்ப்போமேகாளை தனக்கிருப்பில்லைமாதே. (௩௩)

பெரியநாற்கெட்டின்மந்தன் பெரியசோமற்கேழ்புந்தி
அறியவற்கெட்டிற்பாம்பு மரும்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்ச நிற்கினுஞ்சுபமேயில்லைச்
சரியதாமிடமானாலுஞ் சாவதுநிஜமேகண்டாய். (௩௪)

பரித்தவிலக்கினத்துக் கிருபக்கம்பாபர்நிற்க
மறுத்துநின்றிடிற்பலத்தின் மனையினிற்பாபியாகச்
செறித்தவர்க்கேழிற்பாபி சென்மாதிபாபியாகிற்
குறித்திவராட்சியுச்ச மாகினுங்கொடுபோங்காலன். (௩௫)

விதித்தவன்னைமாக வெண்கதிரோழினிற்க
மதி[illegible]ஸ்தமிக்க மங்களனிவர்க்கேழாகப்
பதித்தவர்பகையேசேரப் பாஸ்கரன்மகனேழாகில்
எதிர்த்தவாசின்றாராகி லேந்திழைமாதேகொல்வர். (௩௬)

தஞ்சமாய்கேந்திரகோணந் தனைமகனொருவனிற்க
அஞ்சநான்புடவன்பாம்பு மவர்க்குநான்கிரவியாக
மிஞ்சியேசுபருஞ்சேர்ந்து வலமிடப்பார்வையின்றி
[illegible]தித்தகாளை நாசமன்றிரவுதன்னில். (௩௭)

7

வீசுங்கதிரோனெட்டிருக்க விரையமரவஞ்சனியிருக்கத்
தேசச்சதிரமிடமாகச் செவ்வாயொருவன்கதித்திருக்கப்[போல்
பேசும்பெரியோர்நோக்கின்றிப் பெருமைதவிர்ந்துபேதையைப்
காசக்குழவியன்றிரவி னடக்கும்வழிதானெமபுரத்தே. (௩அ)

ஏழோரிடத்திற்சனியிருக்க தெதிரானிடத்திலிரவியுனும்
தாழ்வாம்பிறையந்தணனிடத்திற் றரணிசுதன்பாம்புடன்கூட
வாழாநின்றப்பெரியோரும் வலமிடத்தாகிலுநோக்கின்றி
வீழாததனமுன்னேநடந்து வீயுங்குழவியன்றிரவே. (௩௯)

நிலமகனுதையம்பாம்பு நின்றிடவிரையமந்தன்
பிலனுடனிரவியெட்டிற் பின்னேழிற்செவ்வாய்நிற்க
நலங்கொடுநல்லோர்நிற்கு நகருளோர்க்கீனமாகிற்
குறிகொண்டுகண்டபோது குறிகிடுங்குழவிசீவன். (௪௰)

பிறக்கும்பொழுதேயுதையமதிற் பிலனோடரலரவமுமே
சிறக்குமதியோடிருமந்தன் சென்மாதிக்கோர்பகையாகி
நிறக்குநல்லோர்நோக்கின்றி நிலையத்தெட்டோனஸ்தமிக்கிற்
பறக்குங்குழவியிரவுநில்லாப் பத்தாதணையும்பலரோகம். (௪க)

பிறைதேய்ந்தெட்டிற்கரியினுடன் பெலநோக்கின்றியுதையாதி
சிறையுந்திரவியுடன்கூடிச் செவ்வாய்மதியிடத்தானுடனே
இறைபூந்தெட்டேனரவமுட னுறெட்டாகநிற்கிலுமே
குறைசேர்ந்திருக்கக்கொடுங்கூற்றன் குறுகுங்குழவியிரவுநில்லா

பத்தாவுதையத்ததிபதியும் பருமதியிடத்தானஸ்தமிக்கப்
பெத்தார்மதியுயர்சனியுடனே பேரோடரவஞ்செவ்வாயும்
இத்தோடரவர்க்கெட்டாகிப் புண்ணியரிவரைநோக்கின்றேல்
அத்தாடியத்துக்கதுமுன்னே யம்பலமாகுங்குழவியுமே. (௪௩)

குதிகொண்டநல்லோர்நிற்கக் குருமதியாறெட்டாக
மதிகொண்டுபாபர்வீறி மனைக்குநான்கசுநிற்க
விதிகொண்டவிடத்தான்வீறி விரையமுன்னவனுமெட்டிற்
பதிகொண்டுநின்றாராகிற் பறந்திடுங்குழவிசீவன். (௪௪)

நல்லவர்நால்வர்பாபர் நடுவதினிற்கமற்றோர்
சொல்லுதையாதிகோமன் சுகமின்றிப்பாபர்கிட்டி
நில்லதிலுதையமெட்டோ னிலையவனெட்டினின்றால்
வில்லமுத்ததிகமாதே வீயுமன்றிரவுதன்னில் (௪௫)

பறிகிலமதியினெட்டோன் பாபருமுனைதயசிற்க
குறிமதியிடத்தான்பாபர் கூடியேமதிக்கெட்டாக
அறிவுநூல்வேதமூர்த்தி யவருமேபாராராகில்
முறிபடுங்குழவிசிவன் மூவைந்துநாழிதன்னில். (௪௬)

எட்டுடனெட்டோன்கூடி யிருபுரம்பாபியாகக்
கட்டுடனெட்டுக்கெட்டுற் கரியரான்மிகைத்துநிற்க
மட்டுடன்வேதநூலான் மனையவர்பாராருகில்
விட்டுடன்போமேசிவன் விழுமைந்துநாழிதன்னில். (௪௭)

ஈராறெட்டோர்கேந்திரமதி யிருந்தமனையாராறெட்டிற்
சேராதவருடன்மதிபதியுஞ் சென்மத்துடனுஞ்சேர்ந்திருக்கக்
காராதுடன்வெள்ளிமந்திரியுங் கலந்தேழிரவிக்காகினுமே
ஈராறெட்டுநில்லாதிங் கிரவேகுழவியிறந்திடுமே. (௪௮)

இரவின்றிடமுறைதயமதா யீரைந்திரண்டிடங்கரிசேயாய்ப்
பரவின்றிடச்சந்திரனும் பாம்புமவர்க்காறெட்டாகில்
அரவுபகையானவர்க்காறி லந்தணர்நிர்க்கவுமதிகெட்டாய்க்
குறையுடனெட்டோனஸ்தமிக்கிற் குழந்தையேகுமெமபுரமே.()

விதியுடனிரண்டொருபாபமே விடமதியரவமுங்கரியுடனே
மதியுடன்புந்தியுங்கரிக்காருய் மன்னவனிவர்க்காறெட்டாகில்
அதியுதைமதியவர்பகையாக வந்தணரிவரைநோக்கின்றேற்
கதிகுய்யத்துடன்கருமாண்டு கழன்றுவிடுமேகாசினியில். (௫௰)

சுந்திரனிடத்தானுதைபதியுஞ் சூரியனுடனேகூடவுமே [னுமே
மந்திரியெட்டோன்மதிக்கெட்டோன் மந்தனுமாரனும்பார்க்கி
புந்தியும்பாம்புங்கரிநாலாய்ப்பொன்வெள்ளிக்கேழிநுமாகிநுமே
இந்திரபதியோடாறுலு மிறந்திடுமெமபுரவழியதுவே. (௫௧)

உத்தமமொருவர்நோக்கின்றி யுதைத்திடமதிற்பாபருமே
சத்தமவிடமதுநான்கினுமே சரிவரவாரனுமந்தனுமாய்ப்
பத்தினும்பாம்பிராவெள்ளி பாலாய்பொன்றையநிற்கினுமே
செத்திட்டன்றேகுழவியுமே சோர்ந்திடுமெமபுரவழியதுவே. ()

ஈனமாயிருக்கச்சந்திர னீராறிலிரவிபாம்பும்
தானுமோர்மதிக்கோகெட்டிற் சனியுமேயொருவனுக்
கீனமேயிவர்க்குநான்கிற் செவ்வாயுநின்றுறுகில்
தேன்மொழிமாதேகேளாய் செத்தி[illegible]ன்றே. (௫௩)

பருமதிநின்றிடத்துப் பகலவனைந்தேயாகத்
தரும்விதியொன்பதாகித் தனைமகன்மதியோடாகக்
குருபதிவினையமாகிக் கொடும்பாம்புமேழினின்றால்
வருமதுதீம்புண்டாகிக் குழவியுமன்றேமாளும். (ருச)

நன்றியகோணமேந்திர நகருளோராறெட்டாக
னின்றிடவீராறெட்டோர் னிற்கவேகேந்திரகோணம்
அன்றியமதியோடின ராயினுஞ்சுமாதேமேகளாய்
சென்றிடச்செய்வதெல்லா னின்றிடாதிருக்குஞ்சீவன். (ருரு)

ஆயுள்காண்டம் முற்றிற்று ஆ ரு௱அ.

பிரதி அரிஷ்டகாண்டம்.

——:0:——

எட்டுடனெட்டுவீட்டி லிருந்தவன்பாபராகில்
பட்டுடன்சோமன்காரி மகிழ்ந்துடனவர்க்கேயேழிற்
பொட்டெனவிரவினிற்கப் பொன்சுங்கனிவர்க்கேநான்கிற்
கட்டுடனிருந்தாராகிற் கடினமாய்மரணமாமே. (க)

எட்டவர்க்காறுவீட்டி லிருந்தவன்சனியேயாகிப்
பொட்டெனநான்கிற்செவ்வாய் பிரியமாய்னிற்கத்தானும்
மட்டறவிவர்க்கேநான்கின். மன்னவனிரவிதிங்கள்
ஒட்டுறவாகனின்று லொருநாளின்மரணம்பிள்ளை. (உ)

பாம்புனின்றதர்க்குநான்கிற் பத்தியேசனியுனிறகத்
தேம்புடனிவர்க்குப்பத்தில் வெயயவன்சுங்கன்புந்தி
ஆமிடமதர்க்கேயேழி லம்புலிசெவ்வாய்னின்றாற்
காம்பிளமுலையினாளே கடினமாய்ச்சாவுமுண்டே. (ங)

மதிக்காறின்மந்தனிற்ச மருவிடையிதற்கேயேழில்
அதிர்க்கோணமாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தானாகிற்
பதிக்காறிவிரவிபுந்தி பாங்குடன்சேர்ந்தேனிற்க
விதிக்காறுமாதந்தன்னில் விளையுமேமரணமாக. (ச)

விதியதிர்ச்சனியேனிற்க வீரிமுன்னிரவியின்சேய்
அதியதர்க்கைந்திர்ப்பாம்பு மவருடன்மதியுனிற்கப்
பதியதர்க்கீராறுகப் பருசுங்கனரசன்புந்தி
சதிரதமாகினின்றுற் சாவதுமெய்தான்மாதே. (ரு)

சேர்மனுறிந்தவீட்டிற் சொல்விடஞ்சனியேனிற்கச்
சோமனூர்வலமாயாறிற் றியருங்குருவுஞ்சுங்கன்
பரமனுரிவர்க்கேரெண்டிற் பனிபுந்திகூடிநிற்க
ஏமனூர்கூடவந்திங் கிழுத்துடன்போவன்றானே. (௬)

எட்டவனிருந்தவீட்டி லிரவியும்பாம்புங்கூட
மட்டெனவவர்க்கேயேழின் மகிழ்ந்துடன்செவ்வாய்சேர
விட்டவனிடத்தின்மந்தன் விண்மதியிவர்க்கேயாறில்
மட்டுடன்சுபருநீச மாயினுற்குழவிசாமே. (௭)

தாழ்த்தியவெட்டோனீசஞ் சதிர்பின்னேனல் தமிக்க
வாழ்த்தியவுதையத்தானும் வலமதுசெவ்வாய்கூட
வாழ்த்தியவரவங்காரி மதிக்கேழினின்றாராகிற்
போற்றியதனத்திற்சுங்கன் புந்தியுநின்றாற்சாமே. (௮)

குருவினுக்கெட்டிற்காரி குருமதிக்காறிர்ப்பாம்பு
பிறருக்குமாறிர்ச்சேய்க்கும் பிறகினேனல்தமிக்க
மருவொக்கப்புந்திநீச மகிழ்ச்சியில்லாமனிற்கக்
கருவற்றுப்பேர்மேபிள்ளை கண்டுடனுரைப்பாய்மாதே. (௯)

கதிருதையத்துக்கெட்டோன் கனகசவேயுதையஞ்சேர
அதைச்சதிர்காரிசெவ்வா யமர்ந்துடனிருக்கத்தானும்
எதிரதிர்ச்சுபரில்லாம லிருக்கினுமாதேகேளாய்
சதிரொருநாளுநில்லாச் சாவதுவருவதுண்டே. (௰)

அருக்கனுக்கெட்டோனேழி லதிர்ச்சனிகூடிநிற்க
உருக்கமாயுதையத்தானு மொருமையாயல்தமிக்கப் [ல்
பெருக்கமாய்ச்சோமற்கெட்டோன் பின்புடன்மதியுஞ்சேர்ந்தா
அருக்கமாய்ப்பிறந்தபிள்ளை யன்றிரவதனிற்சாமே. (௰௧)

புந்திமதிச்சுங்கன்கன்னி பொருந்தியநான்கின்மந்தன்
விந்தியபாபரெண்டில் வெய்யவன்வினையனிற்க
அந்தியுஞ்செவ்வாய்பத்தி லாறினிற்குருவேநின்றாற்
சந்தேகமில்லைமாதே சாவதுமுடனேயுண்டு (௰௨)

சனித்தொருவளவிக்காரி சேர்ந்திடவரவுங்கூட
இனிக்குருவேழினிர்க்க விவர்க்குநால்பூமன்சேரத்
தனித்தொருவீட்டில்வெய்யோன் றனக்கேழிற்சோமனின்ற
கனிக்கரபானபிள்ளை கண்டிருமாதஞ்சாமே. (௰௩)

கரிமுகில்வண்ணன்காரி கதிரவனேழினிற்கப்
பிரியமாய்ப்புந்திக்கேழிற் பெருநாளன்சோமன்சேர
அரியதாய்க்குருவுக்கேழி லவ்வெள்ளிபூமனிற்கச்
சரியதாய்கேழுமாகிற் சாவதுமுண்டுமாதே. (யச)

உதையமாமதிபனிரண் டாயினுமாறெட்டாயினுமே
இதையாதிபதிக்கேழினிற்சனி யொருவனுமேகிற்கச்
சிதையாமதியேழிடமாகவே சேரவும்பூமகனும்
வதையாதியெவருமொரு குழவிமாண்டிடுமே. (யரு)

மந்தனார்க்கிருபக்கங்கதிரோன்செவ்வாய் மகிழ்ந்துடனெ
ட்டிலொருபாம்பேநிற்கத், தொந்தனுய்ச்சுந்திரர்க்கே சனியே
ழாகிற் சுபருமேயிரவிவிடையின்னிடமதாக, வந்தனுருதைத்து
க்கதிபதிவருநீசமாகியே விளைத்திடமதனில், அந்தனா புரமதி
ன்மதிப்பாகவேயவிழ்ந்து குழவிவருவதரிதாகபோய்விடுமே. ()

ஆறெட்டுக்குடையோர்சேர்வுற் றம்புலிராஜன்சுங்கன்
மாறிட்டுமெட்டாறுக மறுத்தங்கேகூடாராகிக்
கூறிட்டுவுதையந்தன்னிற் குறிவிடைநிற்கத்தானும்
வேறிட்டுபோமேபிள்ளை வீவதோராண்டிரண்டில் (யஎ)

இரவிசன்செவ்வாய்தானு மிருந்தொரின்னிடத்தார்சேர்ந்து
கருதுதையத்தினிற்கக் கனமதியீனமானல்
அரவுமோருயிரெட்டாக வமர்ந்துடனிருந்தாராகில்
தாவுமும்பிள்ளைநில்லாச் சாவதுகுழவிமாதே. (யஅ)

பகையோரைந்திலிவ்விடத்தாரு மிகையோர்நான்கிற்சேர்ந்திட
மிகையோர்நான்கிடத்தாரு மேலெட்டாறிலிருக்கினுமே [வே
வகையொருபொல்லாதொருவனுமேவந்துதையத்தினின்றிடவே
நகைபருவத்தினிர்ச்சேர்ந்திடுமே நமனுருலகநன்னுதலே. (யகூ)

கண்டிடனுதயமுன்னும் பின்னுமாய்ச்சனிசேய்பாம்பும்
விண்டுடனின்றாராகில் விண்மதிக்குருவுமெட்டில்
மொண்டுடன்சுங்கன்மூன்றின் முழுகதிர்நான்கினின்றாற்
கொண்டுடன்போவார்தூதர் குழவியைக்கூறுசெய்தே. (உய)

சுங்கனுகிராறெட்டிற் சூரியன்காரிசெவ்வாய்
அங்கனோராசனின்ற வதர்க்கெட்டிலரவகிர்க்கப்
பொங்கமாய்ச்சனிக்கேநான்கிற் போயிருந்தவனுஞ்சோமன்
இங்கிதமாகநின்ற விவனுமோராண்டிற்சாவன். (உக)

ஏழுட்டுணைதயம்பத்தி லிருக்கவேசனிசேய்பியர்
வாழ்மதிநல்லோராண்டில் வருந்தவத்திடத்திருந்தால்
தாழ்வுடனரவுமெட்டிற் றளர்ந்திடாதிருந்தானாகில்
வாழ்வுடன்கூடப்போமே வந்தநாளதனிர்ச்சாகும். (௨௨)

கோணத்தார்சேர்வுற்றெட்டிற் கூடியேசனியுநிற்க
நாணொத்தமதியும்வேந்த னிரண்டாகிநிற்கச்
சேணுற்றசெவ்வாயொண்டிற் செம்புள்ளிபாம்புநான்கிற்
காணுற்றுநின்றாராகிற் கருதியேகுழவிசாமே. (௨௩)

ஆதித்தன்காரிசோம னமர்ந்துடன்கூடிநிற்கக்
கோதித்துக்குருவுமெட்டிற் கோணமேயரவுநிற்கச்
சாதித்துத்தனத்திர்ச்செவ்வாய் சரியவருடனேசுங்கன்
வேதித்துநின்றாராகில் வீயுமேயாண்டிரண்டில். (௨௪)

போமென்றுசொல்வாய்மாதே பூமனார்சனியுமெட்டில்
ஆமென்றவிலக்கினத்தா னவனுமேயிரவிகூடில்
ஏனென்றவுதையந்தன்னி லெட்டவனிருக்கத்தானும்
நாமென்றுசொல்லவேண்டா நமனதுகொண்டுபோமே. (௨௫)

போமென்றுசொல்லலாமே பிதுர்நவநீசமூடம்
ஆமென்றுசொல்லலாமே யந்தெட்டுக்கெட்டோனீனம்
நாமென்றுசொல்லப்போமோ நன்மதிபகையுமானாற்
சாமென்றுசொல்வாய்மாதே சார்ந்தொருகாலைபேறு. (௨௬)

இடந்தடவாகநின்று லிதிர்க்குருபார்வையாகில்
வந்தடவாகிநின்று வழிபார்க்குமெமபுரத்தே
செந்திடவாகிச்சுங்கன் சென்மாதிபார்வையாகில்
பொந்திடத்திருந்துமாதம் போய்விடுமென்றுசொல்லே. (௨௭)

பிறையிறைசனியும்பாபி பிரியமாய்நிற்கக்கூட
நறைபிறப்பில்லாவெட்டோ னலங்குன்றியஸ்தமிக்க
இறைபிறந்ததியுங்கேந்திர கோணருநலமேயன்றித்
தறைபெறல்சொல்லலாமோ சாவதுநிஜமேமாதே. (௨௮)

புல்லதாய்ச்சனிக்கோநான்கிற் பூமனார்பகைத்தேநிற்க
ஒல்லையிலிரவிநான்கி லொருவர்கூடாயனின்றால்
மல்லதாய்ப்பிறையுந்தேய்ந்து மதிக்கெட்டிலுதயநின்றாற்
சொல்லலாஞ்சாகுமென்று துணிந்துடனுலகின்மாதே. (௨௯)

மறித்தொருசனியுநிற்க மற்றும்பொன்னஸ்தமிக்க
மறித்தவன்சுங்கனீசம் வெய்யவன்மதிக்கேயெட்டிற்
பறித்தவன்பகையோர்சேர்ந்து பாம்புசேய்க்குதையனின்றாற்
குறித்துடன்சொல்வாய்மாதே குழவியுஞ்சாமேயென்று (௩௰)

செறித்தலக்கினாதிபீசஞ் சென்மாதியஸ்தமிக்கக்
குறித்தங்கேசனியுமெட்டோன் கூடியேயுதையஞ்சேரக்
கறுத்தொருசெவ்வாய்நான்கிற் கண்டிடிலேழிற்பாம்பு
தெத்துடனின்றானாகில் மரணமேகுழவிதானும். (௩௧)

சேராதபாவியோடே சென்மாதிகூடிநிற்கப்
பாராதநல்லோர்னின்று பனிமதிக்கெட்டாய்னிற்கக்
காராமனுதையத்தானுங் காரிசேய்க்கேழினிற்க
வாராதேவருமேதீம்பு வையகந்தன்னின்மாதே. (௩௨)

ஒருமையாய்க்காரிசெய்வா யுதையத்திர்ச்சேர்ந்துனிற்க
அருமையாய்ச்சோமனேழி லலரியுங்கூடனிற்கப்
பிரியமாய்நான்கிர்ப்பாம்பு மிதர்க்கரசெட்டானாகிற்
கரியதாம்பிள்ளைகூடக் கலந்துடன்சாமேமாதே. (௩௩)

பத்துடன்பத்துவிட்டிர்ப் பதியவர்பதியாய்னிற்க
இத்துடன்கோணத்தாரு மிழிகுலமாயிருக்க
மத்துடனுதயமேழோன் மனமிடைந்தஸ்தமிக்கச்
செத்துடன்போமேபிள்ளை க்ஷீணசந்திரனுமானால் (௩௪)

விண்ணவர்பிறக்கிற்றீது விளையும்வாறேதோவென்னில்
நண்ணவர்சுகப்படாம னலக்கமாமறிப்பேயாகிக்
கண்ணவர்பாம்புஞ்சேயுங் கரியவனிவர்கள்சேரிற்
கொண்ணவர்நாலாய்னிற்பர் கொடுங்கணைவழியினாளே. (௩௫)

வையகந்துதித்தபேர்க்கு வருகின்றவரிட்டமெல்லாம்
பொய்யுரவிரவிகாரி பூமனுநான்காய்க்கோணம்
மெய்யரவாகின்று மிகைத்தவர்க்காறெட்டாகிற்
கையறமாதனின்று கலங்குவர்புவியின்மாதே. (௩௬)

மண்ணுளோர்பிறக்கிற்றீது வருவதுகேளாய்மாதே
நண்ணுளோர்கேந்திரகோண நகருளோராறெட்டாகக்
கண்ணுளவீராறெட்டோர் கதித்துநாற்கோணஞ்சேர்ந்தால்
எண்ணுளசுகமுந்தப்பி யிருப்பதுமில்லைகண்டாய். (௩௭)

மாண்டேயெனச்சொல்லின் மதியுமேசனிக்கேயெட்டில்
அருணனையரவந்தீண்டி லக்கணமிறப்புநோக்கி
இரணமாய்ப்போம்பிள்ளை யிருப்பதுபொய்தான்மாதே
அரணினிலிருந்திட்டாலு மன்றிரவதனிற்சாவே. (௩அ)

தோஷநிவர்த்தி.

சாவதுமெய்தான்சொல்வாய் சனிக்கெட்டிலிரவிநிர்க்க
ஆவதுகலையுயர்ந்த பூரணமதியைப்பாம்பு
நாவதுநீட்டிப்பார்க்க நாலுலத்துதித்தகாளை
போவதுமெய்தான்சாவே பொல்லாதகெடுதிமாதே. (௩௯)

பூரணபெலத்திேனாடு புண்ணியர்சுபமேயாகிற்
காரணமில்லைசாகக் கனக்கவேவயதுமுண்டு
சீரணமதியேயானாற் செல்வருந்தாழ்ந்துநிர்ப்பர்
கூரணிப்பாபர்மேலாய்க் கொல்லுவார்கொஞ்சநாளில். (௪௰

எட்டிரண்டுடனேசோம னினமில்லாமனிர்க்க
விட்டொருபதினொன்கேழுக் கினியவர்மேலாய்நிர்ப்பர்
மட்டொருகலையினின்முன் மாஅமுக்கோணர்மேலோர் .
தொட்டதுகுறிதான்பார்த்துச் சொல்லவும்வேண்டுமாதே. ()

மூன்மூன்றுபிறையிற்பொல்லா மூன்றுகோணத்தார்பொல்லார்
யுன்மூன்றுபிறையிற்கேந்திரப் பதியரும்பொல்லாராவர்
தன்னுறுபனிரெட்டோர் சமனுகவிருப்பர்தாமும்
வன்காதலுள்ளமாதே வகையறிந்தெடுத்துச்சொல்லே. (௪௨)

பொல்லாதபாபர்கிர்க்கப் புகுந்திடப்புந்திதானும்
எல்லாருநலமேயாவ ரிடந்திடவிரவிநல்லோர்
சொல்லாதபகையேகொண்டு தோன்றியவயதுமட்டும்
இல்லாதுசொல்லப்போமே விளங்கிள்ளைக்கினியமாதே. (௪௩)

உச்சமேயாகினல்லோ ரொருவேளைநீசமாகும்
அச்சமேபொல்லாதாகி யவருமேதீம்பாய்நிர்ப்பார்
குச்சமேய்நீசமாகிற் கொள்ளுமோருச்சமுண்டே
மெச்சவேநல்லோராகி மேலாகிநிர்ப்பர்தாமே. (௪௪)

ஆட்சியாய்நின்றபேர்க்குத் தாட்சியுங்கொஞ்சமுண்டு
தாட்சியாய்நின்றபேர்க்கிங் காட்சியுங்கொஞ்சமுண்டு
ஆட்சியைமகிழ்ந்துபார்த்துத் தாட்சியைத்தள்ளவேண்டாம்
கேட்சியாயூடுதாக்கிக் சரிப்படச்சொல்வாய்மாதே. (௪௫)

பகையென்றுசொன்னூர்ச்சொல்லும் வகையிலேநல்லதர்க்கும்
நகையென்றுசொன்னால்வந்து பகையாகநிற்குமாதே
மிகைவகைதெளிந்துபார்த்து மேதினிதனிலேநன்றாய்
வகைதொகையறியாதார்க்கு வகுத்துரையினியமாதே. (சசு)

ஆட்சிநட்புச்சநீச மறியவேசகையுங்கூடச்
சாட்சியாயுதையங்கொண்டு சதிர்கோணமீராறெட்டும்
மாட்சியாய்லாபம்ரெண்டு மகிழ்ந்திதிலூடுதாக்கி
ஆட்சியாய்ப்பார்த்துச்சொன்ன லேயமொன்றில்லைமாதே. (சஎ)

ஒன்பதுபேருநின்ற நிலைதனையூடுதாக்கி
இன்பமாய்ப்பார்த்தொன்றுக்கொன் றிருப்பதுகேந்திரகோணம்
தன்பதிக்கீராறெட்டிற் றனலாபமானோர்கொண்டு
பொன்பதிமதிக்கேபார்த்துப் போம்பலன்சொல்லலாமே.(சஅ)

காரியைப்பிடித்துப்பார்த்துக் கடுகவேவிதியைச்சொல்வாய்
சூரியன்றனைப்பிடித்துச் சொல்லுவாய்பலன்பிதுர்க்கு
வீரியம்பாம்பைப்பற்றி விளங்கவேயோகஞ்சொல்வாய்
சோர்விலாச்சுங்கன்றன்னாற் களத்திரபலனைச்சொல்லே. (சகூ)

பூமனுடன்பிறப்பை போதவுவறிந்துசொல்வாய்
நாமனல்பெரும்புந்தி நல்கணக்கினியபுந்தி
தாமனர்முகத்தினாலே தையலேசொல்லக்கேளாய்
சோமனர்முதலாய்க்கொண்டு சொல்லவேவேண்டுமாதே. (ருய)

மந்தன்பூபன்திக்கெட்டின் மற்றோர்குருவுஞ்சுங்கனுமே
வந்தங்கிருந்தவரவினுக்கும் வகையாயிரவிமதிக்கெட்டில்
நொந்தங்கிருந்தாற்சகலமுமே நேக்காடாகவிளையுமது
பந்தயங்கூறிச்சொன்னாலும் பலியாதிவர்க்குப்பகைவருமே. ()

எட்டோனிரவியாயினுமே மதிக்கெட்டாயிற்பகையாமே
கட்டாயமர்வுற்றெட்டினதற் கெட்டாயரசன்கூடினுமே
கெட்டோனரவமிருந்திடத்துக் கெட்டாய்சுங்கனிருக்கினுமே
கெட்டோன்கெட்டாலப்போதுக் கிட்டுயிரிழந்துமாண்டிடுமே()

மட்டமாய்ச்சுங்கன்மதிக்கெட்டின் மலர்ந்தேயரசன்விதிக்கெட்
எட்டாயிருந்தோனவர்க்கெட்டி லிரவும்பாம்புமிருந்திடவே[டில்
எட்டாய்ச்சனியர்க்கெட்டாகிற் குருபுந்தியைரவியம்புவிட்டாற்
கிட்டாய்ப்பறந்திடுங்குழவிச்செகமேலிருப்பார்க்குரைமாதே.()

இரவியர்ரெட்டிற் பொன்னவனிருக்கநோக்கப்
பரவியுயர்ந்தயிறைக்கே யிருநான்கிற்பாம்புநிற்க
அரவுநின்றவ்வீட்டுக் காறெட்டமாச்செம்சனியும்
மருவியிருக்குமதுவாகிற் செனித்தகுழவிமாண்டிடுமே. (ருச)

உதையத்தாரு மிரவியுமதினிர்க்க
மதியொத்தசனிக்கே யிருநான்கின்மன்னவனும்
அதைத்தொரு நான்கிற்கேய்சுங்கன்
விதியத்துடனிருப்பது மிப்படியே. (ருரு)

உதையாதிபார்க்க வுபமதுகாணுதாகில்
மதியாகப்பிடித்துப்பார்க்க வண்மையுந்தெரியாதாகில்
கிரகாதியாகப்பார்க்கக் கிடைத்திடுமுள்ளதெல்லாம்
விதியாகச்சொல்வாய்மாதே வேறொருவினைவேயன்றி. (ருசு)

இப்படிச்சொல்லத்தக்க தெத்தனைகுறியோவென்னில்
நற்படியுதித்தோர்நல்ல நகரம்போற்கிரகம்போலச்
சொற்படிநன்முகூர்த்தஞ் சோபனமருவுஞ்சாந்தி
அப்படிப்பலனீயாது மனையவுமதுவேயோகம். (ருஎ)

சுபமதுசெய்யுங்கர்மஞ் சொற்றனம்வேறேவேண்டாம்
நிபமதிலட்சந்தோஷ கிறுத்துமேகிரகேந்திரம்
இபமதாய்ச்சுபங்களெல்லா மெத்திக்குமதுவேநன்று
உபமதுகேந்திரநல்லோ ருறுதியினதுதானசொல்லே. (ருஅ)

பிரதிஅரிஷ்டகாண்டம் முற்றிற்று-ஆ-சருசு.

தனக்காண்டம்.

தனலாபம்.

தனபாக்கியலாபமானோர் தாழ்விலாச்சுபரசேர
மனையோக்கியமின்றிநல்ல மனையாட்சியுச்சமாக
இனசவுக்யமிலாபாப ரிவரையேபாரரல்ல
வினவுறுமாதேகேளாய் வேண்டியபொருளுண்டாமே. (க)

கன்மாதிமுன்பின்னோரும் கலந்துடன்றனமேசேரச்
சென்மாதிதனத்தோன்கூடிச் சேர்ந்துடனிலாபஞ்சேர
மண்மாதினுதித்தோனீலன் மனையிராறிரவிபாரப்
பெண்மானினனையமானே பெருந்தனத்தவனுய்வாழ்வான். (உ)

தனத்தவனிடத்தான்லாபன் றனியராயவர்க்கேழ்பொன்னன்
சினத்துடனிலாபமானோர் கென்மாதிதனமேழாகக்

கனத்துடனிரவிபூயன் காரியுமரவநோக்கா
மனத்திடமாகநின்றான் மகமேருகிரிபோல்வாழ்வன். (௩)

உத்தமனுதயங்கூடிச் சத்தமர்கேழினிர்க்க
நித்தமன்மனையோன்கூடிக் கொற்றவர்க்கேழேயாகில்
இத்துடன்சனிசெய்திய ரிரவிபாம்பிவனைப்பாராப்
பெற்றறன்றலமேயென்னப் பெருமைமாயப்புவியில்வாழ்வான்()

சுபர்கோணகேந்திரர்க்கேள் சுற்றியேபாபரின்றி
அவர்கேந்திரகோணமானா ரம்மனைச்சுபரோசேர
இவர்க்கரிதாரித்திய மிருந்திடமீராறாகில்
எவரிதற்பிறப்பானாலு மேந்திழைதனமுண்டாமே. (௫)

தனமதுபாக்கியலாபந் தலைவருமிருப்பிடத்தா
மனமதுற்றைந்திலாறின் மந்தனாராலேழாகி
இனமதுசுபாநோக்கில்லா திருக்கினுமாதேகேளாய்
குணமதுதனமேநாசங் குறியிதுதப்பாதாமே. (௬)

தனநஷ்டம்.

பத்தொருவேழிரண்டோன் பாஸ்கரனுடனேகூடி
மற்றொருவீராறெட்டோர் மனையதிற்கூடினாலும்
சத்துருவுடனேகூடிச் சனிக்குநால்சரியுமாகி
மித்துருபார்வையின்றேல் மிகுதியுந்தனமேநாசம். (௭)

அஞ்சுமூன்றெட்டிர்க்காரி யாரனுமிரவிநிர்க்க
நஞ்சுபொன்சுங்கன்புந்தி நலமதியிவனைப்பாராச்
செஞ்சுடர்க்கிரணன்பக்கல் சேர்ந்துடனுதையநின்றால்
மிஞ்சிடுபாக்கியமில்லை மிகத்தரித்திரமேயுண்டு. (௮)

எட்டோரிரண்டிலாப மிரவியுங்காரியாரால்
மட்டிடோராறெட்டாகி மதிகுருசுங்கனிர்க்க
விட்டிடோரிரவிக்கேழில் விடையுமேயுதையநின்றால்
இட்டொருநாளுமில்லா திவன்றனநாசமாமே. (௯)

உதையமூன்றெட்டிப்பாப ரோரங்கிடவிலாபமுன்பின்
பதியவேமுன்பின்பற்றிப் பாபரோநிர்க்கக்கூட
மதியுமேயீனமாகி மனமிடைந்திராறாகிற்
சிதையுமேதனமுநாசஞ் சீர்கேடனாகிவாழ்வன். (௰)

தனத்தினாலிரவினிர்க்கத் தனைமகன்றர்மமானாற்
செனித்தநான்மந்தனைகச் சென்மாதிக்கொருநால்புந்தி
மனத்திலரவனிற்க மந்தனுக்கொருநான்காகில்
இனத்தினாற்றனமேநாச மிருமூன்றிற்சுங்கனானால். (௰௧)

தனக்காண்டம்-முற்றிற்று-ஆகூ-௪௨௭.

ரோககாண்டம்.

———:o:———

ரோகமின்மை.

செனித்தவன்மதியுநல்ல சேர்திடஞ்சுபமேயாக
விதித்தவனாறெட்டாகி வெள்ளிபொன்னுதயமானாற்
குறித்தொருநாளும்ரோகங் கொண்டிராதலறியோடும்
பறித்தவனுடனேசோமன் பற்றினால்ரோகமில்லை. (௧)

உதித்தவலக்கினத்துக் கோரிருபக்கநல்லோர்
மதித்தவற்றிடத்தினல்லோர் மன்னவன்பார்வையாகிற்
குதித்ததப்புரத்தேயோடிக் கூப்பிடும்ரோகமில்லை
செனித்திடத்திருந்தாற்சுங்கன் சேராதிரோகந்தானே. (௨)

மதிக்கிருபக்கநல்லோர் மன்னவனேழினிற்க
உதித்தொருவிடத்திற்சுங்க னொருவனாய்நின்றானாகிற்
பதிக்கொருரோகமில்லாப் பண்டிதனாகிநிற்பன்
இதற்கொருரோகமின்றென் றேந்திழைமாதேசொல்வாய். (௩)

உதையாதிபதியைநல்லோ ரோங்கியேபார்ப்பாராகில்
இதையிருபக்கநல்லோ ரிருக்கினும்பாபரின்றி
அதையதிமதியுச்சேர்வுற் றவ்விடாலானேயாகிற்
சுதமதன்போலவாழ்வான் சொல்லுவாய்ரோகமில்லை. (௪)

சதிரநால்கோணமூன்று சவுமியரிழிக்கநோக்க
எதிரதிற்கூடிநில்லா திருக்கனும்பாபரன்றி
மதுரமாய்மதியும்வீறி மனையதுநலனேயானால்
விதரணமாகவாழ்வன் வினைதீம்புரோகமில்லை. (௫)

ரோகம்.

எட்டினினுதைந்தன்னி லிரவியுமிருக்கநோக்கப்
பொட்டெனவுதையோன்கூடிற் பொல்லாதபித்தரோகம்
கட்டியகச்சிநாளே கனல்வண்ணனிருந்திட்டாலும்
விட்டிடாதிருக்கும்பித்த ரோகமென்றறிந்துகொள்ளே. (௬)

சீணமாய்மதியிருக்கச் சேர்ந்திடப்பாபந்தானும்
ஈனமாங்கடகந்தேளு மிடாசுரவாகிநின்றால்
ஈனமாமீராறெட்டி லிருக்கினுங்க்ஷயமேயுண்டு
மானமேயுடையமாதே மடிவனேக்ஷயரோகத்தில். (௭)

சரமதிராசிசுங்கன் றனியிராப்பாபர்கூட
அரவதிற்சனியுஞ்சோம னவருமேயாறெட்டாகி
உரமுளவிலக்கினாதி யோனுமாறெட்டாகில்
வரமதிலுதித்தோர்க்கெல்லாம் வந்திடுக்ஷயரோகந்தான். (௮)

இந்தவொண்டெட்டிற்புந்தி யிராசனுங்குசனேநோக்க
வந்திடவுதயத்தானும் வக்கிரனேக்கக்கூட
சந்தோஷமதியுஞ்சினை சவுமியர்பாவையன்றி
அந்தெட்டுக்குடையோன்லக்ன மாகினுற்சுரமேயுண்டு. (௬)

லெக்கினமபாபர்கிற்க வெண்டெட்டில்வெள்ளியாகில்
இக்கணமுதயத்தானு மிழிகுலமாயிருக்க
மெய்க்குருசோமனின்ற விடமதிற்பாபர்நோக்கில்
மிக்கெனுந்தனத்திறளே பிரமியவியாதியுண்டே. (ய)

எட்டிரண்டிடத்தில்ராகு விருக்கினுமுதயஞ்செவ்வாய்
மாட்டுடன்சோமனின்ற மனையதிற்பாபர்நிற்க
விட்டிடாதிருக்கின்மூலம் விடையனும்விளையமானல்
தொட்டிடும்பிடைவியாதி தோன்றியமுதலாய்மாதே. (யக)

எட்டினிற்செவ்வாய்நிற்க வேழினிற்பாபர்நிற்க
மட்டினிலெண்டிரண்டின் மணியாரக்கேதுநின்றல்
தொட்டிடுந்திலதமாதே தோன்றியமுதலாய்த்தானே
விட்டிடாரொணங்கள்கண்டு வீழ்வனேகுதரோகத்திற் (யஉ)

சனியுதையத்தினிக்கச் சந்திரனொட்டாக
இனிகுசனிவனைப்பார்க்க விவனுக்கேகிரந்திரோகம்
பனிமதியுடனேபாபர் பார்க்கினுமிரத்தரோகம்
அணிமதிக்குன்றிநின்று லரசனேரோகமுண்டே. (யங)

மகரகும்பத்திற்சோமன் மாறியேபாபர்கூட
அகமுறங்கெனித்தராசிக் காறெட்டுமாமேயாகில்
நகருதைராசியாள னட்பின்றிநீசமாகில்
விசற்பமாய்க்கெடுதிரோகம் விளையுமேயநேகமாக (யச)

உதித்தலக்கினத்தில்ராகு வுடையவன்கூடநிற்கப்
பதித்திடத்தெட்டின்னாதன் பாபருங்கூடனிர்க்கக்
கதித்தவனிரவிலக்னங் கலந்துடனின்றாகிற்
செனித்தநாண்முதலாய்மாதே ஜென்மாதிவெள்ளைகுஷ்டம். ()

செனித்தலக்கினத்திற்பாபர் சேர்ந்துடனிராகுனிர்க்கக்
குறித்தநாலோனுநீசங் குணவீனமஸ்தமாகில்
இனிக்கரிசோமன்கூடி யிவனுமேமகூீணமானல்
மனத்தொருநாளுனில்லா மார்பினில்சூலைகாணும்

எட்டினிற்பாதிசேயக்கிங் கிருந்ததுமுடவனாகில்
தொட்டென்பாபர்பார்க்கத் தோன்றியவுதயத்தோனும்
மட்டென்பகையடைந்து மடிப்பன்தநீசமானால்
விட்டிடமார்பிற்சூலை விளையுமேயதனிற்காண்டம். (௰௭)

அட்டமத்தோனிநீச மதுதனிற்கரிசேயாகில்
நட்டமாய்த்திங்கணிர்க்க நல்லுதயத்திர்ப்பாபர்
இட்டமாய்நல்லோர்பார்க்க விருக்கவுமில்லாதாகிற்
பொட்டெனவருமேரோகம் பொல்லாதசிரசிற்பீடை. (௰௮)

பூமனுமாறினிற்கப் புகுந்திடவெள்ளிதானும்
சோமனுஞ்சனியுங்கூடிச் சொல்லுதயத்திற்பார்க்கக்
காமனுக்கெட்டின்மன்னன் கருதியேநீசமானால்
போமதுசீவனில்லாப் பொல்லாதரோகந்தீதே. (௰௯)

சுங்கனெட்டதனினிற்கச் சூரியன்கூடச்சேர
இங்கிதமகனபூம னிவற்கேழினுதயமாக
அங்குமோர்சோமனின்ற வங்கிலைபகையுமானால
இங்கிதராஜனீச மாகினுவிரணமுண்டே. (௨௰)

ஆறுமீராறிரண்டு லம்மனையாரும்பாபி
சேருமேயாகினல்லச் சென்மாதியுடனேபாபர்
பாருமேபரிதிநீசம் பகையடைந்தரசினின்றால்
மாறுமேநேத்திரம்ரெண்டு மனந்தடுமாறிநிர்ப்பன். (௨௧)

இரவிசுன்மதியுங்கூடி யிருந்திடப்பனிரண்டாக
அரவுசேயிரண்டினிர்க்க வவர்க்கேழிலரசனாகப்
பகைகேந்திரத்திலானோர் பகைநீசமூடமானாற்
குறைமதியமிசைநீச மாகினாற்குருடனாமே. (௨௨)

இருமூன்றுமிடத்திற்சோம னிரணியன்கூடநிர்க்க
வருதனமருவீராற்றில் வந்திடவுதயம்பாம்பு
குருசனியுடனேகூடிக் கோணத்தின்பின்னேநிர்க்க
வருமதுநேத்திரானி மைவிழிமாதேகேளாய். (௨௩)

மூனிலாபத்தின்மன்னர் முன்பின்னாய்ப்பாபர்நிர்க்க
வேணுமென்றானீச மங்கிசையதுவேயானாற்
பேணுமோர்மதியுமூன்றும் பிறையுடனீனமானாற்
காணுமேகைகாலூனங் கண்டிடுமசதியாக. (௨௪)

சரமதிலாபபாகச் சதுரைந்துதிரமேயாக்
உரமதுவுமையமேழா புடையவர்கேந்திரமாகிற்
சுரமதாய்க்காணும்பின்னே சோகமாய்விசாரமுண்டு
இரவியோர்சுகமில்லாம லிவனுக்கேபேய்பிடிக்கும். (௨௫)

இந்திடமதனிற்பூம னிருநர்மருங்காணமூலம்
வந்திடுந்தீராதாகும் வல்லவர்சுபர்நோக்கானல்
நொநதிடுந்தீம்பைந்தாண்டி னைக்கினுற்றியர்க்கெல்லர்
இந்தவடைவாகிற்சிவ னிறந்திடுங்குருநோக்காட்டால். (௨௬)

சூரியனிருந்தார்க்கேளாய் சொல்பூதமாகக்காணும்
காரியோனிருக்கிர்க்காணுங் கருமகாபூதமாக
வீரியனிருக்கினல்ல விஷமதுகடித்துக்காணும்
கூரியோன்சிந்தையாகிற் கொண்டவெண்சனிபிடிக்கும். (௨௭)

மந்திரியிருக்கினல்ல மறையதேவதையேகாணும்
சுந்திரனிருந்தாற்றார்க்கை தோஷமாம்பிசாசுகேது
அந்தரசானசுங்க ளுகில்ராட்சசியேயாகும்
நந்துறுமசுபர்பார்க்கின் சித்துடன்கொல்வர்மாதே. (௨௮)

ஆறவனுதையனிர்க்க வைந்துதையோனுஞ்செவ்வாய்
வேறதுனில்லாக்கூடி வேண்டியேயிடத்தினிர்க்க
ஏறவுமில்லாச்சோம னிருபிறையாகினின்றல்
தேறவொட்டாமனிர்க்குந் தெளியாதசுரமேகாணும். (௨௯)

கர்ப்பனையுதையந்தன்னிற் கண்டிடிர்க்கேதுவானல்
னிர்ப்பதுகுளிகன்பத்தேழ் நாலினினின்றுனுகில்
அர்ப்பருஞ்சுபருமற்றோ றவரையேபாராராகிற்
சொர்ப்பனமனதிற்றெய்வம் போலவேதோன்றுமாதே. (௩௰)

உதையத்திற்சுங்கனிர்க்க வோராறின்முடவனுகச்
சிதைவுற்றசோமன்றன்னைச் செல்வருமபாராராகிப்
பதையுற்றபாபர்பார்க்கிற் பசாசுகள்பூதர்காட்சி
விதமொத்தமயிலினுளே மேனுனைவியாழநீதி. (௩௧)

ரோககாண்டம் முற்றிற்று-ஆகூ-சகூஅ.

வெகுபுத்திரர்.

பஞ்சமனாட்சியாய்ப்பொன் பகையிலாப்பாபரன்றிச்
செஞ்சுடர்க்கோணறிற் சீர்தவமந்தனயக்கம்
மிஞ்சிநாக்கேழுபத்தின் மிகுதியினின்றாராகிற்
கொஞ்சியேயநேகம்புத்திரர் குறைவிலாதிருப்பர்தாமே ௧

அஞ்சுடனஞ்சுவீட்டா ரவ்விடம்பார்வையாகி
மிஞ்சியாண்டளப்பனாட்சி மேருவினிற்சுதகானும்
நஞ்சுகொண்டிருந்தோரான் ஞாயிறாபுந்திநீலன்
வஞ்சிரண்டாறெட்டாகிற் புத்திரரனேகமுண்டே ௨

புத்திரவிடத்தேநல்ல புண்ணியவான்களிர்க்க
மித்துருவானோர்பக்கல் புத்திரவானுஞ்சேரச்
சத்துருவானபாபர் சரியதாநில்லாராய்ப்
பத்திருமறையோனானாற் பாராளப்புத்திருண்டே ௩

நாலாருவிடத்தினல்லோர் நல்குருவுச்சமாட்சி
மேலாறுபின்னோனேழின் மிகுத்திலாபத்திநிற்கத்
தானாறுயனிரண்டெட்டிற் றாழ்வுள்ளபாபர்சேரப்
பாலாறுமுடையோனாகிப் பாராளப்புத்திருண்டே ௪

அர்க்கனார்பெலத்துநிற்க வவ்வைந்துக்குடையோனட்பாய்ச்
சரசமாயைந்தாய்வீட்டைச் சத்துருபாபராகில்
அரசராம்பொல்லாராட்சி யுச்சமாயிருக்கத்தானும்
விரசமாயனேகம்புத்திரர் விளையுமேமரிப்பில்லாமல் ௫

குருவொருவனையில்லாக் கோணத்தினடுவேநிற்க
அருகிருவைந்துவீட்டா னவனுமேலாபமாகில்
திருகொருபாபரந்தச் சேய்காரியாதெட்டாகில்
வருமொருவைந்தினல்லோ ராகினாற்புத்திருண்டே ௬

அந்தணன்சோமனாக வவற்கொருபகையுமில்லாச்
செந்தணன்மேனியானுஞ் செஞ்சுடர்க்கிரணன்காரி
வந்தணையாமற்பத்தேழ் நான்குடநிருப்பதன்றேற்
சந்ததமேடைமீதிற் சாரவும்புத்திருண்டோ ௭

ஆரல்கரிவிடைய லழவன்மறையோ னந்தவனுக்கேயுறவாகிற்
சோரக்குருசீதளன்புதல்வன் செவ்விடைவெள்ளியுமேயாகில்
ஆரார்இருவைந்திடமானதையோ ரையுமருவன்றியேசுபர்பார்க்க
வீரர்இனியதைசீதகனாட்சினும் விண்ணுலகாளவும்வெகுபுத்திரர், ௮

கல்லுண்டானவனைந்திடமன்றிக் கரியோனிலமகன்பகலில்லா
வில்லுண்டானவனும்முதயவனு மேருவில்வெள்ளிக்கெதிரில்ல
சொல்லுண்டானவனைக்கோன்கூடிச் சொற்சிறுமீனடிதலையில்லா
அல்லுண்டானவனைந்தடியாறு லவர்க்கேவெகுபுத்திரருண்டாம் ௯

அஞ்சிடமஞ்சோன்மந்திரி யவரிருந்திடத்தைப்பாபர்
மிஞ்சிடப்பாராராகில் மிகையஸ்தமானமில்லா
தொஞ்சிடமுன்பினபாபர் தோன்றியநில்லாராகிற்
கொஞ்சிடவநேகம்புத்திரர் கொடும்பகைநீசமன்றேல் ௰

ஈரஞ்சுடையோனைஞ்சி லிருந்தோற்கேழிறன்குடையோன்
ஓரஞ்சுடையானீரஞ்சி லொருமித்தாருஞ்சனிக்கேழிற்
பாரஞ்சிடையினேனுக்கழில்லாப் பாபரொதுங்கிநிற்கினுமே
சேரஞ்சிடையின்சுபர்நோக்கச் செழிக்கவெகுபுத்திரருண்டே ௰௧

மன்னவனஞ்சினேனுக்கில்லா மனையவன்கரியவற்கெதிரில்லா
என்னவனஞ்சிலிருக்கில்லா விருபாலருக்கனகுசனில்லா
அன்னவனஞ்சேழ்போக்கில்லா வம்புலிநின்றவர்க்கெதிரில்லா
சொன்னவனஞ்சேழ்கரியில்லாச் சொல்லுங்குழவியதுநில்லா ௰௨

ஆட்டினிலாரனிற்க வஞ்சிடமதுவேயாக
வீட்டினிற்குருமீனாகில் வேண்டியபுத்திரருண்டு
கேட்டவற்குரைக்கலாகுங் கேடிலாதிருக்குமாதே
ஒட்டுரையேழின்மந்த னிருந்திடாதிருக்கின்மெய்யே. ௰௩

தேளினிற்செந்தீவண்ணன் செனித்ததுக்கைந்தேயாக
ஆளுமோராசன்வில்லி லமர்ந்துடனிருந்தானாகில்
மாளுமுக்கோணம்பின்னே மந்தனுமில்லாதானால்
கேளுநீபுத்திரருண்டு கேட்டவர்க்குரைப்பாய்மாதே ௰௪

அரியவனாட்சியைந்தா யமர்ந்தொருகுருவேமேஷம்
பெரியவனாகிபந்தன் பேருளமிதுனமாகில்
அதிற்சந்தியுடனேபுந்தி சத்துருவன்றிநிற்கத்
தெரியவர்க்கெட்டோர்க்கின்னந் திரள்புத்திரரென்றுசொல்லே ௰௫

இருந்தவனைந்திற்பெண்ணா யிடமவனுணையாகிப்
பிறந்தவன்புருஷனாகிப் பெருமதியிடத்தோன்பெண்ணாய்ப்
பொருந்தவர்கேந்திரகோணம் பொன்னுக்கேயாகிநின்றால்
வருந்தவம்வேறேவேண்டாம் வந்திமோனும்பெண்ணும் ௰௬

மதிதலப்புருஷனாக மன்னவனிருப்பிடத்துக்
கெதிர்த்தவைமைந்தோன்பெண்ணாய கந்திரமாகிநின்றாற்
பறிக்கதற்பெண்ணேயாகிப் பஞ்சமத்தோனைநிற்க
விதித்திடியோனும்பெண்ணும் வேண்டியதிரளேயுண்டு* ௰௭

வெள்ளியுமைந்தினிற்க வியாழனுக்கதுவீடாகத்
தெள்ளியமறையோனின்ற சீர்மனைச்சேரமற்காக
அள்ளியவைந்தோனின்ற வம்மனைச்சுங்கர்க்காக
முள்ளில்செண்பகமேல்வீசு மொய்குழற்பெண்களுண்டே ௰௮

அம்புலியைநதினிற்க வம்மனைசுங்கர்க்காக
கம்புகல்லைந்தோன்சுங்க னம்மனையதனிற்கூடிச்
செம்மறையவனான்றெண்டில் சேல்பெண்ணங்கிசமேயாகில்
இம்மனிலிருக்குமட்டு மிவனுக்குப்பெண்களுண்டே. ௰௯

பொன்னவனைந்தோனின்ற பொருதினியதனுங்கூட
நின்றவனிதற்கேழ்நின்றோ னிலைபெண்ணங்கிசமேயாக
மன்னவர்பாரராராக மற்றதீக்கோட்களின்றி
யன்னவனிருந்தாகி லெந்நாளும்பெண்களுண்டே ௨௰

மடலறிய.

உதையத்துக்கைந்தின்மந்த னெட்டிற்பூமனிற்க
அதையத்துக்கேழில்ராஜ னைந்தவன்கனலிற்சேர
மதியத்திலாவனுஞ்சேர்ந்து மந்தனுக்கேழேயாகில்
விதியத்தினைமலடனென்று விளம்பினர்நூல்வல்லோரே ௨௧

பத்துடன்பின்சேயந்திற் பகலவனிருக்கநோக்க
ஒத்துடன்காரிலாப முதையனுங்கூடிநிற்க
அத்துடனைந்தோனீச மாயினன்மாதேகேளாய்
செத்துடன்பிறப்பிலாமற் சென்மாதிமடலனவன் ௨௨

அந்தமானைந்தோனீடு மதிற்குருபார்வையாகின்
மந்தனைந்துக்கேழின் மழுவிடைசேர்ந்துநிற்க
இந்தொரிலங்கினைதி யிரவிமேயபார்க்கக்கூட
எந்தநாளளவுமட்டு மிருப்பனேமலடனாக ௨௩

ஆலெட்டுக்குடையோர்சேர்வுற் றைந்திடமாகநிற்க
வேறிட்டுமறையோநீசம் வேந்தனுமைந்தோன்சேரக்
கூறிட்டவுதையங்காரி குளிகனுங்கூடிநின்றால்
மாறெட்டின்மதிசேய்சேர்ந்தான் மலடனேமலடன்மாதே ௨௪

இருமூன்றுடையோரெட்டி லிருந்திடாவிரவிகூட
வருமூன்றிலிரண்டிலைட்டோன் வக்கிரன்சேர்ந்திருக்கக்
குருநாணிநீசமாகிக் கொண்டிடுமுறைதயநீலன்
பருவானமதியும்பாம்பும் பற்றினன்மலடனவன் உ௫

சரைந்திரப்பாபியாகி யினியவர்நீசமாக
ஔரைந்திலுதையத்தானு மொருவெள்ளிமதியுங்கூடப்
பாரைந்துக்கேழிற்பாம்பு பற்றியேநின்றானாகில்
ஆரைந்துதபமானாலு மவனுக்கேபுத்திரரில்லை உ௬

முடவனைந்திநிற்க முகர்ப்பிறையுடபாபி
இடமதாயைந்தோனட்ப யினிக்குருவுடனேபாபி
திடமதாயுதயந்தன்னிற் சேதனுமேனின்றானாகில்
கடவதேபுத்திரருண்டாய் சுசித்துடன்போமேசொல்லாய் உ௭

அஞ்சவன்பாபிசேர வதனிடைச்சுபரேநிற்க
மிஞ்சியேகுருவும்பார்க்க வெதின்மிகையோராகக்
கொஞ்சவனைதிங்கள் குசனுடன்சேர்ந்துநிற்க
வஞ்சியேபிறக்கும்பிள்ளை வகையறமடிந்துபோமே உ௮

அஞ்சினிலலரிநிற்க வவர்க்குநாலேந்தோனாக
மிஞ்சினன்மந்தன்பூமன் மிகுத்தனனைசேனிற்க
தஞ்சதையத்திற்சாயன் றன்குன்றினின்றானாகில்
இஞ்சிபோனதித்தபிள்ளை யிறந்திடுநாசமாக உ௯

ஆறுநாலலரிமந்த னதற்றுநால்குருசெவ்வாயும்
வீறிநாலேந்தோனிர்க்க வேந்தற்குநாலேழாக
தூறினைதயநதனிற் சுபருமேனின்றராசில்
மாரிலாவுதிக்கும்பிள்ளை மாணமாநாசமாக ௩௰

மூன்றொன்றிற்சுங்கனிற்க முன்னவனீனமாக
வேறுமென்றாசனல்ல விடமதாய்நிற்கத்தானும்
பூனுகொண்டலரிகாரி பூமனுமுறவேயாகில்
வேறுமேயானும்பெண்ணும் விளைவதுமடியந்தீப்பாய் ௩௧

சென்மத்திற்பாபிநிற்கச் சீதானுடனேதியர்
கன்மத்திற்பகையோராகக் கருத்துள்ளோராறெட்டாகத்
தன்மத்திலரவஞ்சேர்ந்து தமைமகனைந்தினின்றால்
துன்பத்திலுதித்தகாளை தோன்றியவன்றேநாசம் ௩௨

பூரணமதியிநோடு புண்ணியர்மேலானாலும்
காரணமானவைந்தோன் கனகனுமுடனானாற்
கூரணிகாரியால் குருவைந்திநின்றாராகில்
வாரணிதனத்தினாளே வருமைந்தருக்குழவிநாசம். ௬௬

நண்ணியசுபரும்பாபர் நலந்தியர்கலந்துநிர்க்கப்
பண்ணியேவருகில்ராஜ னவருடன்கலந்துநிர்க்கப்
புண்ணியவைந்தோன்பாபி பிலவானாயிருந்திட்டாலும்
நிண்ணயமானகாலை நில்லாதுகொஞ்சநாளே. ௬௭

அண்ணியலக்னஞ்சோமனைந்திடஞ்சேராராஜன்
புண்ணியர்பார்வையின்றிப் போயிருந்திடமுந்தீதாய்ப்
பண்ணியபாவத்தாலே பாவரேமிகுத்துனின்றால்
எண்ணொருபுத்திரரில்லை யேந்திழைமாதேகேளாய். ௬௮

வியாழமுந்திங்கள்கூடி வேறொருகிரகம்பாராச்
சகாயமாயைந்திநிர்க்கச் சந்ததம்புத்திரநாசம்
னியாயமாய்ச்சுபரேயென்று நினைவதினினைக்கலாகா
துபாயமாய்ப்பார்த்துச்சொல்வா யுபமதுகூறிதப்பாதே. ௬௯

புத்திரகாண்டம்-முற்றிற்று-ஆக-௫௩௪.

சகோதரகாண்டம்.

மூணினிற்பாபியாக முன்பின்னோரஸ்தமிக்க
வேணுமேநவத்தினந்தன் வக்கிரனிவாக்கோணகாய்
காணவேசுபரில்லாமற் கடும்பகையாகிநின்றால்
ஆணுமோரில்லாபெண்ணச் சகோதரமில்லைமாதே. ௧

ரெண்டொருவிடத்திற்பூம னிராகுவுமைந்தினிற்கக்
கண்டொருவுதையத்தானுங் காரியுங்கூடிநிர்க்க
நண்டிருமேனியோடே நாகமேகலந்துநிர்க்க
விண்டொருதனியனாகி மேதினியிருப்பன்மாதே. ௨

பொன்னவனெட்டினிர்க்கப் பூமனுஞ்சனியுங்கூட
விண்ணவர்க்காட்சியான வேந்தனுமுன்றோன்கூட
அன்னவனரவங்கூடி யாறினினின்றாறாகில்
நின்றவனொருவனாகி நிலைபெறநிர்ப்பன்மாதே. ௩

ஆறவன்மூன்றினிற்க லம்புலியுடனேபாம்பும்
கூறறியுடனேமூன்றோன் கூடியேயெட்டினிற்கக்
கார்கரிக்கேழிற்செவ்வாய் கருநாதங்கூடிநின்றால்
வேறொருதுணையில்லாமன் மேதினியிருப்பன்மாதே, ௪

சுங்கனுடனேகூடிச் சூரியன்மூன்றினிற்க
அங்கனேயைந்திற்செவ்வா யதற்கேழிற்பிறையுதிக்க
இங்ஙனேநுதைபங்கன்னி லிருந்திடப்பாம்புதானும்
செங்கரியுடனேமூன்றோன் சேர்ந்திடிலொருவனாமே. ௫

திரிவுடமருவப்பாபர் திங்களுங்கூடினிற்க
எதிரிடமாவனிற்க விளமதிர்க்கேழிற்காரி
குருவிடமதற்கேழாறிற் குருமதிதானேயாகிப்
பருதியுமூன்றோன்கூடிற் பாலன்பின்னில்லைமாதே, ௬

காரியுமாரால்கூடிக் கண்டொருவுதையமூன்றிற்
சூரியனுடனேமூன்றோன் சுபரிமேயாராகில்
வீரியவிடையிலாகம் விண்மதிதானேயாகிற்
பாரிவனுதித்தபின்பு பாலனேயில்லைமாதே. ௭

அங்கொருமூன்றிற்பாப ரங்கொருசெவ்வாய்நீசம்
இங்கொருமூன்றோன்பாபி யிருபுறமிருந்தானாகிற்
செங்கருவரவங்காரி திவாகரனிக்குதானாய்
எங்கிருந்தாலுமாதே யினிச்சகோதரமேயில்லை. ௮

இப்படியிருந்தபோதி லிதிற்குருசுங்கன்கூட
நற்படச்சோமன்புந்தி நலமுள்ளோர்கூடப்பார்க்கச்
சொற்படச்சுபர்நலத்திற் றோன்றிடுஞ்சகோதரங்கள்
மெய்ப்படிநம்பவேண்டா மேலாகினில்லார்மாதே. ௯

பூமற்குநான்கிற்பொன்னும் புந்திக்கோரேழின்மூன்றோன்
காமர்க்குமூன்றுநான்காய்க் கருவெள்ளிக்கரிக்கேழாகின்
மூவர்க்குநடுமூன்றாக மூன்றினிலிரவிபாம்பும்
சோமாகுச்சேய்நான்காகிற் சொல்சகோதரமுமுண்டே. ௰

ஆறினிற்சுபரிருக்க வதற்கதியதிலேனிற்க
வேறுகுபாபர்பாரா விருட்சிகனுட்சியாகி
ஈரையராசனிற்க விவர்க்குநால்சேமனாகில்
மேனுரைசகோதரங்கள் மிகுதியாயுண்டுமாதே. ௰௧

ஓரிருவிடத்தாட்சி யொருமையாயாசன்சேரப்
பாரிவருடனேபாபர் பார்க்கவிங்கிட்டாதாகி
ஆறிருவிடமாய்னிர்க்க வாரலுஞ்சங்கன்கூடி
வீரியசகோதரங்கள் வேண்டியதிரளாயுண்டே, ௰௨

காலுபின்னவனேயுச்ச நலமுளவைந்தோனாட்சி
சேலுளசெந்திவண்ணன் சிறுபுந்தியியாழங்கூட
ஏலுளமூன்றிர்ச்சோம னீராறிலலரிமைந்தன்
மேலுடனின்றனாகின் மிகச்சகோதரமேயுண்டே. ௰௩

ஒன்பதாமிடத்தில்ராஜ னொருவனுய்னிர்க்கத்தானும்
இன்பமாய்ச்சோமனுறி லிருந்தவாலாயந்தன்னில்
துன்பமாய்ப்பாபர்சேருஞ் சுங்கனுமுதயனின்றால்
அன்பதாய்ச்சகோதரங்க ளனேகம்பெருண்மோதே. ௰௪

ஆரலுமூன்றோன்வீட்டை யவ்விடஞ்சுபரேபார்க்கச்
சேரலாய்க்கூடினிற்கச் சென்மாதிமதியமாக
வீரிலாதிருக்கபாபர் வேண்டியசகோதரங்கள்
மாறிலாதிருக்குமாதே மணிமுடிச்சேகரனே. ௰௫

உண்டுபோமூன்றிற்செவ்வா யொருவனுமிவர்க்கேழ்மைந்தன்
கண்டுபோஞ்சனிமூன்றாகிற் கனலவனேமுயாலும்
விண்டுபோங்கரிபாபமாலும் விலைவதுமில்லையினைபு
கொண்டுபோஞ்சகோதரத்தைக் குறியிதுகேளாய்மாதே. ௰௬

அத்துடன்போமோமூன்றி லாரலுங்காரியினின்றாற்
செத்துடன்போமேகப்பிச் செல்வரும்பாராராகில்
வித்துடனறுந்துபோமே வெண்கதிர்மூன்றோன்சேர்ந்தார்
பத்துடன்வருடந்தன்னிற் பலனிதுகுறிதப்பாதே. ௰௭

நேசமாமூன்றில்வந்து னிகழ்குருசோமன்கூடில்
நாசமாமிவர்கடம்மை நல்லவரென்னப்போமோ
பாசமாஞ்சுபரேயென்று பார்க்கவும்நம்பலாகா
மோசமாஞ்சகோதரங்கண் முடிவதுகுறிதப்பாதே. ௰௮

சகோதரகாண்டம்-முற்றிற்று

மாதுருகாண்டம்.

உதையநல்சுபரிருக்க வுத்தமருடனேநாலோன்
சிதையாமற்சோமனிர்க்கத் திவாகரன்கரிசேய்பாரர்
தகையாகக்குருநான்காகி லரவுமுமதியைப்பாரா
திதையாகனின்றானாகி லெக்காளுஞ்சதமேமாதர். ௧

பத்தநான்கேழிர்ப்பாப ரன்றியேசுபரிருக்க
முத்துநான்கோனும்பாக்கிய முன்னரசோனுங்கூட
எத்திறற்களோயீராறி லிருந்தவனுட்சியாகிற்
கொத்துப்போற்றழைத்துமாதர் குவலயத்தென்றானிர்க்கும். ௨

விடையுநான்கிருக்கலன்றி வெயிலவன்கரிசேய்பாராக்
குடையுளோனிருக்கவேழிற் குறுகியேசுங்களுங்கில்
நடையுளோனுச்சமாகி நற்பிறையுதையனிர்க்க
இடைசிறுமாதேகேளா யிருப்பனேமாதர்நூறும். ௩

உதையநான்கேழிபத்தோ டொருமையாய்க்கோணஞ்சேர
அதையவர்கேந்திரமானு லந்தமாதாவின்சுற்றம்
சிதைவிலாச்சோமன்வீற்றிற் சேய்காரிபகலோன்பாரா
வதையிலாதிருப்பன்மாதா மண்ணிலினூறதாகி. ௪

மதியவர்பெருமையாகி மற்றதீக்கோட்கள்பாராச்
சதிரிலாசனிர்க்கச் சத்துருபார்வையில்லா
திவர்கேந்திரநான்காய்நின்றா லேந்திழைமாதேகேளாய்
விதியதிலுயர்ந்தமாதா மேதினியிருப்பணூறும். ௫

சதிர்மதியிடத்தானேழோன் சத்தமஞ்சுபரேயாகிற்
கதிராவிரவிசேய்க்குக் கண்டேனிவரைப்பாரா
ததிர்நவமாறெட்டாகி லந்தமாதாவின்சுற்றம்
எதிரொருகுறையில்லாம விருப்பனேவயதுநூறும். ௬

நாலுடனுலிநல்ல நலமுள்ளோரில்லாதாகி
ஏலுளநாலேழானு மிருந்திடநீசமாகிச்
சேலுளமதியுமீன மாயினன்மாதேகேளாய்
பீலுள்ளவன்னைபின்பு பிழைப்பதுமில்லைகண்டாய். ௭

பத்துடன்சனியேய்தீயா பாம்புமேனின்றாராகில்
இத்துடனான்கேழானு மிழிகுலமாயிருக்கக்
கத்துடனிருந்தகல்லோர் கனங்குன்றியஸ்தமிக்கச்
செத்துடன்போவாளன்னைச் சீரணைச்சந்திரனானல். ௮

அன்கர்மதிநான்காக வதற்குநால்செந்திவண்ணன்
இன்னசுருதையங்காரி யிருந்திடிற்சுபரில்லாமற்
பொன்னவனுறெட்டாகிற் போய்விடுமனைநில்லாள்
சொன்னவர்பெரியோரந்தச் சோதனைக்குறிதப்பாதே ௯

இந்தநான்கேழும்பாப ரினியவர்நீசமாகில்
மந்தனுருடனேசோமன் மனையவனஸ்தமிக்கில்
அந்தகாளரசராகி யலரியுமுதையநின்றால்
வந்தநாளன்னைதிம்பு வருமிதுகுறிசப்பாதே ௰

குருமதிநான்கிற்கூடக் கொம்பனையாளேகேளாய்
வருமதுவன்னைக்காகா வங்கிசநாசமாகும்
திருகதுயில்லைகண்டாய் செல்வரும்பாராராகிற்
கருவுடன்மாதாநாசங் கண்டிடுங்குறிதப்பாதே. ௰௧

பூமகனுன்கினிற்கப் புண்ணியர்பாரராகில்
ஆமவனதனுற்சோம னதற்குநான்கிரவிநிற்கச்
சாமவனுதித்தபோதே சனியுமேயுதையமானுற்
போமதுவன்னைகூடப் பிரிவனையில்லாதாகி. ௰௧

மூவிருநான்கோர்கூடி மூன்சதுரத்தினிற்க
ஈரிருசதிரத்தாரு மிருநான்கிலீராறுகப்
பாரிவர்க்காறெட்டாகப் பனிமதியாவுங்கூடிச்
சூரியனுதயநின்றாற் சொல்லுவாய்மரணமன்னை ௰௨

நிலமகநீலன்கூடி நிற்கவேயதுநான்காகச்
சிலையதநீனமாகிச் சீணமாய்நின்றானாகில்
நலமில்லாச்சுபர்பாராக தாயினுமாதேகேளாய்
சொல்விதிவேறேயில்லச் சுத்தமாயன்னைசாவள் ௰௩

இரவிநான்கிருக்கவேழி லிளமதிசனியுங்கூடப்
பரவிநான்கேழிற்பூமன் பாம்புமேயுதையநிற்க
உரவிலாதிருக்கவல்லோ ரொருவரும்பாராராகில்
அரமிலாதிருக்குமன்னை யன்றிரவதனிற்சாவாள் ௰௫

இதுவாகவிருக்கத்திய ரிதிற்குருசங்கன்பார்க்க
மிதமாகச்சிறுநோக்காடாய் மேதினியிருப்பாளாகில்
அதுவாகவைந்தாறுனு லன்னையுமரணமாவள்
பொதுவாகச்சுபரேகூடிற் போகுமெட்டாண்டிலன்னை ௰௪

சுவர்பாபிகூடிநான்கிற் சுத்தமாய்மதியோடாரல்
அவர்கூடிச்சுத்தநான்கோ ணரவமுங்கூடிநிற்க
இவருடனில்லாதாக விருந்திடிலுகயத்தானும
நவமுறுமாதேகேளாய் நாளுன்கில்வியுடன்னே ௰௭

சுத்தமும்பாபிகூடிச் சூரியனுடனேயில்லா
பத்துமுந்நான்குமேழிற் பனிமதியொருவனில்லா
அத்தமுந்நான்குநாளகோ ணட்சியில்லாமலில்லா
நித்தமுங்கன்னியாகி நெடுங்காலமிருப்பளன்னே ௰௮

மாதுருகாண்டம்-முற்றிற்று-ஆக-௱௭௰

பிதுருகாண்டம்.

ஒன்பதுக்கொன்பதைந்தில் வெள்ளியோனரசனிற்க
இன்பதிக்கினியோரோடே யிந்துவுங்கூடப்பார்க்கில்
அன்பதிக்கிரணைட்சித் தானுமேலாபமாகில்
அன்பனுக்கன்பதாகி யவன்பிதாவிருப்பனாராய். ௧

இரவியுமுச்சமாகிக கோணாரு நாட்சியாகப்
பரவியகோணந்தன்னிற் பருமதியரசனிற்க
அரவுஞ்செய்முடவன்புந்தி யாறெட்டுபெனியண்டாகில்
திரவியமுடையோனுகித் தீர்க்கமாயிருப்பன்றந்தை. ௨

பகல்பக்கஞ்சுங்கன்ராசன் பருமதியொன்பாதாகில்
இகலினியோனும்ராஜற் கேழிடமாகிநிற்க
அழலவர்க்கேழிர்க்காரி யரவுசெய்நில்லாதாகிற்
சகலமுமுடையோனுகச் சாவின்றிப்பிதாவுநிர்ப்பன். ௩

அஞ்சொல பதுள்ளோருச்ச மாயிரங்கதிரோனட்பாய்
இஞ்சொன்மாமறையோன்சுங்க னிவர்க்குமோநான்கேழாகிற்
பஞ்சமாய்ப்பாபிநீலன் பாற்கரற்கேழைந்தில்லாச்
செஞ்சோமன்கோணநின்றாற் றீர்க்காயுபிதாவுக்குண்டே. ௪

எட்டோனுமெட்டுவிட்டோ னிரவியேசுபரேபார்க்க
மட்டிருகரிசேய்பாம்பும் விட்டிவர்க்காறெட்டாக
விட்டொருவுதையந்தன்னில வெள்ளியும்புதனுநின்றாற்
பொட்டெனப்பிதாவின்பாக்கியம் போகாதுகேளாய்மாதே ௫

ஆரியனபெலத்துநிற்க வதற்கைந்தொன்பதினில்ராஜன்
சூரியனுடனேபுந்தி சுக்கிரன்கூடநிற்கக்
காரியுமாரல்பாம்பு கலந்தேழினுன்கிலில்லா
மாரியென்மேகம்போல வருஷிக்கும்பிதாவுக்காயுள். ௬

சந்திரேந்திராஜன்சோமன் சத்தமமிரவுநிற்கக்
கதிர்ரூபக்கமாகக் கணக்கனும்வெள்ளிநிற்க
இதற்கெதிர்பாபர்பாரா திருக்கனுமாசேதகேளாய்
பிதுர்க்கதியோகமாகிப் பேருளானுகிவாழ்வன். ௭

கனலெனுடனேபுந்தி காரிசெய்நான்கேழுன்றிப்
புன்னவமிடத்தான்சோடன் பொன்னுக்குநான்கேழாகில்
அகல்வெள்ளிக்கைதந்தோமூன்றில் மூரனுமாதேகேளாய்
சுழல்கொண்டபிதாவின்யோகஞ் சொல்லவுமேநகமுண்டே ௮

வேமிருருகுறையில்லாமல் வெள்ளிபொன்னதமிருக்கத்
தாறெநுமறைநவில்லாமற் றனியனுமிரவிலாபம்
ஆறெருகலேயினூடே யம்புலியுதையமிர்க்க
வீறிலாப்பாபர்பாரா ராயினும்பிதுர்க்கியோகம். ௯

நவமதிற்பாபர்ன்றி நலமுளோரிருக்கப்பார்க்க
மனமதினைத்தநல்லோர் மகிழ்ச்சியாய்க்கூடிநிற்க
வனமதின்மிருகமேறி வல்லவன்கன்னியாகில்
இனமதின்மிகுதியாக விருப்பனைபிதாநூறக. ௰

ஆரியனீசமாக வைந்தொன்பதாரனிற்க
காரியென்றலத்தோன்கூடிக் கணக்கனும்வெள்ளிபாரா
வீரியவிடையினுகா வெண்கதிர்கேழயாகிற்
பாரிவனுகியாமுன்னே பிதுபதஞ்சேராநிற்பன் ௰௧

செங்குருவெட்டிநிற்கத் திவாகரன்பனிரண்டாக
அங்கொருசனியுங்கூட வாரனுநவத்தோன்சேர
இங்கொருநவத்திற்பாம்பு மிரவிக்கேழ்மதியுமானும்
பின்கருவுதியாமுன்னே பிதுர்மடிந்திருக்குமாதே. ௰௨

வெள்ளியோனஸ்தமிக்க வேந்தனுநீசமாகத்
துள்ளியேயதற்கேழ்செவ்வாய் சூரியன்புதல்வனிற்கத்
தெள்ளியநவர்த்திப்பாம்பு திவாகரனைவத்தோரான்காய்
அள்ளியகுழவிமுன்னே யவர்பிதாமாணமாவன் ௰௩

பொன்னவற்கேழிற்பூமன் பொருந்தியநவத்தோனஸ்தம்
நிறைறவர்மூன்றைந்தாகி நீலனுமிரவிநாலாகாய்
என்றவனுதித்தபோதே யிருந்திடுமுதையம்பாம்பும்
கொன்றிடும்பிதாவைமுன்னே கொடுங்கணைவிழியினாளே. ௰௪

நீலனுமிரவிநான்காய் நிற்கினுநவத்தோன்பூமன்
மாலெனுமதிக்குநான்காய் மந்தனுக்கேழாயாகிற்
காலனுமபிதாவைத்தேடுங் கனகனும்வெள்ளியாராய்
பாலனைப்பெறுமுன்னேமை பட்டினப்பிதுர்தான்போவன் ௰௫

இரவிமுன்னீலன்பின்சே யிருநான்கில்வெள்ளிபொன்னும்
அரவும்மோர்நவத்தோன்கூடி யந்தநீலர்க்கேயேழிற்
பரவிபசோமன்புந்தி பாம்புக்குநான்கேயாகில்
மருவுறுங்குழவிமுன்னே மாண்டிடும்பிதாவுமாதே. ௰௬

மதியரசேய்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
பிருகுபோரவரைப்பாரா திருக்கினுமாதேகேளாய்
சதியவர்செய்யுந்தீமை சத்துருபிதாவுக்காகா
விதியது முடியுந்தப்பாக் குறியிதுகூறுய்மாதே ௰௭

மந்தன்சேயிருவர்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
இந்தவரவரைப்பாரா திருந்தவரவரேயானால்
அந்தமுடைய்ப்பிறப்புநோக்கி லப்போதேமடிவுண்டாகிச்
சொந்தமாய்ப்பிதாவைக்கொல்வர் சொல்குறிதப்பாமாதே ௰௮

நாலுபேர்பாபர்கூடி நவத்தினினின்றாகிற்
கோளுயர்பெரியோர்நல்லோர் கூடியேபார்க்கிலன்றி
மாவிபந்திரும்பவந்தக் குழவிமுன்பிதாவின்கண்டம்
ஆலுயந்தமர்ந்தமாதே யதுகுறிதப்பாதாகும் ௰௯

நவத்திடங்கரிநான்காக நாகமுமிரவிநான்காய்ச்
செழித்திட நவத்தோனிற்குஞ் செவ்வாய்க்குநானகேயாகி
மதித்திடநல்லோர்பாரா ராசினுமாதேகேளாய்
குறித்திடுபிதாவின்கண்டங் கொணடுபோங்குறிதப்பாதே ௨௰

ஏழிடமுதையம்பாபி யிருக்கினுநல்லோரன்றித்
தாழ்வுடன்சங்கனிற்கச் சனிக்குநான்காகினிற்கச்
சூழிடமேழோன்பக்கல் சூரியனால்கூடில்
தாழ்விடன்குலைந்துநிற்கும் வருமிதுகுறிதப்பாதே. ௨௧

பிதுருகாண்டம்-முற்றிற்று-ஆக-௫௯௧.

களத்திரகாண்டம்.

மந்தனார்கேழிற்சுங்கன் மனையவனீசமாக
வந்தனாளுடையோன்சோமன் மனைக்கெதிர்புந்தியாக
இந்தவேழுடையன்செய்க்கை யிரவிக்குநான்காய்நின்றாற்
பந்தமாய்ச்சொல்வாய்மாதே பலியாதுகளத்திரநாசம். ௧

குருமூடமாகிநிற்கக் குசனுமேயேழிற்சேர
அருகாடரவத்தினோடே வெவ்வேழுக்குடையோர்கூட
பரிவாடரவத்தினாலாய்ப் பாங்குள்ளசுங்கனிர்க்கக்
கரிகூடநான்கேயாகிற் களத்திரமிறந்துபோமே. ௨

உதையமேழுடையோன்கூட வொருமையாய்ச்சனிக்குநான்காய்
மதியமேழிடத்தில்வேந்தன் மனைக்குநாலசுங்கனிக்கச்
சிதையவேயுதையஞ்செவ்வாய் சேரவேசுபர்பாப்பென்றேற்
கதையதாய்முடியுமயிலே களத்திரமிறந்துபோமே. ௩

பெற்றவனீசமாகப் பின்னேழுக்குடையோனீசம்
கொற்றவன்பனிரண்டாகக் குசன்வெள்ளிகூடநிற்க
உற்றவனுதையங்காரி யொருபகலரவுநின்றாற்
செத்திடுங்களத்திரமெல்லாஞ் சிர்ணசந்தானையானால். ௪

தனமவர்குன்றிநிற்கத் தாழ்வதாயேழோனீசம்
மனதலன்காரிகூட மங்களசுங்கன்சேர
இனன்மதனரவங்கூடி யிவர்நடுவோகநின்றாற்
சினமதுநில்லாதாகுஞ் செத்திடுகளத்திரமெல்லாம். ௫

சீலனுமாரல்கூடி நிர்க்கவேயேழிற்றானும்
கோலாவிரவிசுங்கன் கூடியேநின்றாராகில்
மேலெனுமேழோனீச ராக்கினுமாதேகேளாய்
காலனேர்களத்திரங்கள் கருவறுங்குறிதப்பாதே. ௬

குருமதிகூடியேழிற் கோலமாய்நின்றாராகில்
மருவிவர்சுபரமென்று மகிழ்ச்சியாய்ச்சொல்லவேண்டாம்
வருமதுகளத்திரவானி வங்கிசநாசமாகும்
திருகதேயில்லைகண்டாய் தெரிந்துரைகுறிதப்பாதே. ௭

வெள்ளியுமீனமாக வியாழமுமேழுக்கேழாய்
புள்ளியனாவங்காரி பொருந்தியேயிவர்க்குநான்காய்
தெள்ளியவுதையஞ்சேய்க்குச் சிருடனிராவியேழில்
துள்ளியேநின்றாராகிற் றுணைவிபோங்குறிதப்பாதே. ௮

ஏழவனாட்சியாகி யிருபுரம்பாபியாகத்
தாழ்விலாச்சுங்கனிர்க்கத் தபனவனுடனேகூடி
ஏள்மதியாசன்புந்தி யிவருமேபாராராகில்
வாழ்வுடன்குலைந்துபோமே வருமிதுகுறிதப்பாதே. ௯

சுங்கனார்சுபமிருக்கச் சுற்றியேபாபர்னிர்க்க
அங்ஙனேயிரவியோடே வைந்தெழுக்குடையோர்கூட
இங்கையோர்சுபரும்பாரா திருக்கிலுமாதேகேளாய்
பங்கமாங்களத்திரவானி பலிக்குமேகுறிதப்பாதே. ௰

சுங்கனேரேழான்றனுஞ் சுகமாகநின்றாராகில்
எங்கணுமிவரைநல்லோ ரிருந்திடப்பார்வையாகி
அங்கொருபாபர்கூடி யவர்பார்வையில்லாதாகிற்
பங்கமில்லாமற்றேவி பதிவிருதையாகிநிற்பாள். ௰௧

ஏழிடஞ்சுங்கனோரா டிருந்தவர்சுபரேயாகித்
தாழ்வுடனிவரைப்பாபர் சற்றுமேபாராராகில்
வாழ்வுடனுயர்ந்துநின்று வருவதுகளத்திரமொன்று
நீள்புகழ்குடும்பதேவி யாகியேநிர்ப்பன்மாதே, ௰௨

ஏழிருபுரமுநல்லோ ரிருந்துமேபாபரன்றிச
சூழிருபுரமுஞ்சுங்கன் சுபர்பார்க்கவிருக்கக்கூட
வாழிருமேழோனைந்தில் வலுவையாய்நின்றாராகில்
தாழ்வொருபயமுமின்றித் தழைத்தொருமனையாணிற்பாள். ௰௩

ஆட்சியாய்ச்சுங்கனிரக்க வல்லேழுக்குடையோனட்பாய்ச்
சாட்சியாயாசனேழிற் சகிக்கேழிற்சுங்கனின்றார்
சூட்சியாய்ச்சுபரைப்பாபர் சூழிடாதாறெட்டாகில்
ஆட்சியாபுறங்களத்திர மநேகமாயிருப்பன்மாதே. ௰௪

குடியவனாட்சியாகக் குருவுதையத்தினிற்க
அடியவனுச்சமாகி யவர்க்கேழிற்பிறையுதிக்க
வெடியவன்காரிசெய்க்கு விண்ணாவிவரைப்பாராக்
கொடியிடைநிர்ப்பனாறாய்க் குறியிதுதப்பாமாதே. ௰௫

ஒருபிறைமதியனிர்க்க வொருபத்திற்குருவேனிர்க்கக்
குருவைநான்கிற்சுங்கன் கொப்பனைக்கேழேயாகில்
திருகுவாராமற்பாபர் திகழுச்சமாட்சியாகில்
மருவுறுகளத்திரபாக்கிய மகம்மேருகிரிபோலாமே. ௰௬

தனமுமேழுடையோர்நட்பாய்த் தனியிராச்சுங்கன்புந்தி
இனமேழுவிடத்துதானகா யிருக்கினும்பாபர்பாரா
மனையெழிற்குருவேநிற்க மதியுமேயுதயமாகுற்
கனமேழமேகம்போலக் களத்திரங்கலந்துநிற்கும். ௰௭

சோதிபோல்வெள்ளிவீறிச் சூரியன்முன்னேநிற்கப்
பாதியேழகபந்தன்னிற் பண்டிதலாசனசேர
நீதியோரில்லாமந்த னிலமகனிலிபாம்பு
எதிலுமில்லாதாகி யிருக்குமேல்களத்தியோகம். ௰௮

வருமுனைதனத்தினேழான் வங்கிசநலனேயாகக்
குருதிங்கள்வெள்ளிபுந்தி குலமுளோர்கூடப்பார்க்கக்
கரிபூமனிரவிபாம்பு காணுமலொதுங்கிநின்றால்
மருமணமொன்றேயாக மகிமேருவாகிநிற்கும். ௰௯

களத்திரகாண்டம்-முற்றிற்று-ஆக-௯௱௰.

தானுதிபலக்காண்டம்.

சொல்லுநீபகையாரென்னிற் றென்றுதையத்துக்கெட்டோ
னில்லுமோரவியுங்கூட னிசமதுவிரையமன்றேன்
கொல்லுமப்பகைதானுண்டு கொண்டிருந்தவருங்கூட
வல்லினுமிருந்தாராகில் வருவதுபகைதானுண்டே. ௧

பூரணமதியையானுற் பொல்லாதாரியாரோவென்னிற்
சீரணமில்லாதாங்கோற் றவனுமேயிராறெட்டிற்
காரணமாகநின்றாற் கனக்கவேபகையுமுண்டு
வாரணிதனத்திலுளே வருவதுபகைதான்கேளாய். ௨

உதயமோதியுநின்ற வொளிமதிபதியுஞ்சேர்ந்த
அதையகற்கெட்டாய்க்காரி சேய்க்காசிரவியாகச்
சிதைவுற்றமதியேற்றிங்க ளிருப்பதுமேழினன்று
இதையிந்துபுந்திநின்று லினித்தோஷமில்லைமாதே. ௩

சொன்னதோர்கேந்திரத்திற் சுபமதியரசன்சுங்கன்
நின்றதிர்கேந்திரமாறு னில்லாதுபாபதோஷம்
ஒன்றதிலேந்திர்க்கைந்தா யொருமையாநின்றாராகில்
வென்றதிலுலகிலுள்ள தோஷமேவிலகுமாதே. ௪

சந்திரற்காதிற்புந்தி சரமமாறன்மந்தன்
சுந்தரற்கைந்திற்சுங்கன் சொன்னவத்திலேவேந்தன்
தந்திரமாகநின்றாற் சற்றுமேபகையுமில்லை
இந்திரவிமானம்போல யிருந்துடன்வாழ்வர்தாமே. ௫

கனத்துடன்காரிசெவ்வாய் கஙமுடனிரவிபாம்பு
கனத்துடனெட்டெட்டாமி லிருக்கினுநலனேயாகும்
மனத்திடமாகநின்றான் மாறுமேதீமையெல்லாம்
சினத்துடனிருந்தாராகிற் செல்வமுங்கொடுப்பர்தாமே. ௬

உதையமுமதிக்குங்காரி பொதுங்கியேநிற்கத்தானும்
சிதையவேயிரவிசெவ்வாய் சேராமலாபமாறில்
மதிபதியவர்களேழன்றி மற்றொருவிடமாய்த்தானே
இதமாகநின்றாரா லெந்நாளும்பந்தமேயுண்டு. ௭

கனத்ததோர்குருவுக்கெட்டிற் காரியும்விடையுமாகா
மனத்தொருசுங்கனில்ற மனைக்கெட்டிற்செவ்வாயாகா
சினத்ததோர்மதிக்கேயேழிற் சேர்ந்திடும்புந்தியாகா
இனத்ததோரிரவுக்கெட்டி லிருந்திடுமதியுமாகா ௮

இன்னொருபகைதான்கேளா யிரவிக்கேள்சனியுமாகா
பின்னொருசனிக்கேழ்நான்கிற் பூமனிருக்கலாகா
முன்னுறுமாவுக்கேழின் முழுசுங்கனிற்கலாகா
இன்னொருபூமனுக் கேழினுஞ்சனியேயாகா. ௯

கொற்றவர்க்கெட்டிற்சோமன் கூறினுமிருக்கலாகா
மெய்த்தவரிரவிக்கெட்டிற் கொற்றவனிருக்கலாகா
சுத்தமாய்க்காரிக்கெட்டிற் சுங்கனுமிருக்கலாகா
அத்தவாவிக்கேழ்நான்கி லரவமுமிருக்கலாகா. ௰

அரவமுங்காரிநான்கி லேழிலுமிருக்கலாகா
இரவிக்கோரேழுமாக விருப்பதும்பூமற்காகா
உரவற்றனிர்க்கும்வாறு மூபமதுபாராராகில்
வரவுடன்போக்குங்கண்டு கைசொல்லமாட்டார்பாரே. ௰௧

இனியொருபகைதானுண்டு தியம்புவேன்சொல்லக்கேளாய்
தனிபுறங்குருவுக்கெட்டோன் றன்வந்துகூடலாகா
சனிமதியுதையமெட்டோர் தாமுமேகூடலாகாப்
பனிசுங்கன்வீட்டோன் வந்து பரிந்திருந்தாலுமாகா. ௰௨

உற்றதோர்மதிக்கெட்டோ னுதயத்திற்கெட்டோன்கூட
இற்றதோரிரவிக்கெட்டோன் மந்தனைப்புந்திபூரான்
உற்றதாய்க்கூடினாலு மொருமதிக்கிவருமாகா
அற்றதுசொன்னேனின்ன மாகாதுமுண்டோதே. ௰௩

சுங்கனுர்க்கெட்டோன்மந்தன் சூரியனிடத்தனேனந்தன்
பொங்குமாயிடத்தன்சேரப் பூமனுர்விட்டான்கூடி
அங்கனேசுங்கன்பக்க லமர்ந்துடனிருக்கலாகா
மங்கையேயார்க்கினியமாதே மற்றதுஞ்சொல்லுவேன்கேள் ௰௪

உதையாதிசுங்கன்வேர்கற் கேட்டினிலுறையலாகா
இதமாகவிருந்திட்டாலு மேகங்கெழுமாதேபொல்லார்
அதையோராநிறைந்துவேபார்த்திங் கமர்ந்தவர்பகைகட்டென்று
விதமறியாதபேர்க்கு மிசையறிந்திணிலுகூறே. ௰௫

ஆரவினுக்காறவிட்டோ னவருமேயாறெட்டாகி
குருவுக்குமதிவிட்டானுங் கூடாமனைறெட்டாகி
குருவொகமதிக்கேயந்த குருவிட்டானெறெட்டாகில்
இரவுக்குச்சமனுய்நின்றிங் கிவருமேபகையாய்நிற்பர் ௰௬

சாணியேசுங்கர்க்கெட்டோன் கருதியேபுந்திக்காகா
பேணியேபுந்திகெட்டோன் பெரியசுங்கர்க்குமாகா
நாணியேயிருந்தாராகி னலமில்லைதோஷமுண்டு
பேணியேபகையாய்நின்றுற் பெருமையுமில்லைமாதே ௰௭

அரசற்குநாலேழ்பத்தோ னம்புலிக்குறவேயாகும்
விரசதிர்மூப்மூனறைந்து மூன்றுடன்விட்டார்தாமும்
அரியசுங்கற்குநல்லோ ராறெட்டுபணிரெண்டோரும்
சரசமாய்ச்சனிக்கேநல்லோ ரிவர்சத்துருவல்லகண்டாய் ௰௮

நலங்கொண்டமதிக்குநான்கே ழுடன்பத்தொர்கொற்றவர்க்காம்
பெலன்கொண்டமூன்றைந்தொன்பான் பிருகினுக்குறவேயாகும்
புலன்கொண்டவிராறெட்டோன் பொல்லாதசனிக்கேநல்லோர்
இலங்கொண்டிங்கிருபபர்யாதே யிப்படிநலன்றுனுண்டே ௰௯

சுரகிரனிருந்தநான்கேழ் பத்துடன்விட்டார்தானும்
மெட்குறவாமேசந்திரன் மேலுடன்வந்தார்தாமும்
மிக்குறவாமேராஜன் விரையமாவெட்டாறேழும்
நற்குறவாமேமந்த னண்ணுமுறவுமாதே ௨௰

நில்லதுபாபர்நின்ற நிலையதுக்கெட்டாரோர்
வல்லதுசுபர்க்குநல்லோர் வரும்பகையில்லைமாதே
சொல்லதினலனறிந்து சூட்சியாயறிந்துசொல்வாய்
அல்லதிதறிந்துபார்ப்போ ரமரர்க்குமிக்கோராமே. ௨௧